தினமணி

**காரீப் பருவப் பயிர்களுக்கு குருணை வடிவ யூரியா சிறந்தது: வேளாண் அதிகாரி யோசனை**

First Published : 23 Aug 2010 10:13:15 AM IST

கிருஷ்ணகிரி, ஆக. 22: காரீப் பருவப் பயிர்களுக்கு குருணை வடிவ யூரியாவே சிறந்தது என வேளாண்மை இணை இயக்குநர் கா.ராஜன் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பது:

மாவட்டத்தில் காரீப் பருவத்துக்குரிய மானாவரி பயிர்கள் விதைக்கப்பட்டு மேலுரம் இடும் நிலையில் உள்ளன. நெல் சம்பா வயல்களிலும் இந்நிலை காணப்படுகிறது. இவற்றுக்கு யூரியா, பொட்டாஷ் ஆகிய உரங்கள் மேலுரமாக இடலாம்.

இதில், தழைச்சத்து உரத்தை ஈடு செய்ய குருணை வடிவத்தில் தயாரிக்கப்பட்ட யூரியா சிறந்ததாகும். இதை பயிர்களுக்கு இடும்போது பயிர்கள் பச்சை பிடிப்பது, சிறிது கால தாமதமாகும். தழைச்சத்து நீண்ட நாள்களுக்கு பயிர்களுக்கு கிடைப்பதால் பயிர்கள் நீண்ட நாள்கள் பசுமை மாறாமல் இருக்கும்.

சாதாரண யூரியாவை மண்ணில் இடும்போது உடனடியாக கரைவதால், அதில் உள்ள தழைச்சத்து, நீரின் மூலமாகவும், ஆவியாதல் மூலமாகவும் வீணாகின்றன. குருணை வடிவ யூரியாவை பயன்படுத்தும்போது, தழைச்சத்து வீணாகாமல் பயிர்களுக்கு கிடைக்கும்.

குருணை வடிவ யூரியாவை பயன்படுத்துவது எளிது. ஈரப்பதம் மிக குறைவாக உள்ளதால், திறந்து வைத்தால் யூரியா கட்டிகளாக மாறுவது இல்லை. காற்றில் உள்ள ஈரப்பதத்தை உறிஞ்சி தண்ணீராக மாற்றுவதும் இல்லை. இதனால் குருணை வடிவ யூரியாவை சேமித்து வைத்து, பின்னர் பயன்படுத்தலாம்.

இதன் எடை சாதாரன யூரியாவை விட அதிகமாக இருப்பாதால், காற்று மற்றும் நீரில் குருணை வடிவ யூரியா அடித்து செல்லாது. சாதாரண யூரியா துகள்களாக இருப்பதால் பயிர்களின் இலை பரப்பின் மேல் படிந்து, பயிர்களுக்கு சேதம் உண்டாக்கும் வாய்ப்பு உள்ளது.

மாவட்டத்தில் அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உரக்கடைகளிலும் விநியோகிக்கப்படும் குருணை வடிவ யூரியாவை விவசாயிகள் வாங்கிப் பயன் அடையலாம் என்றார் அவர்.

**விவசாயிகளுக்கு தள்ளுபடி விலையில் எஸ்கார்ட்ஸ் டிராக்டர்கள்**

First Published : 22 Aug 2010 12:00:00 AM IST

சென்னை, ஆக.21: வேளாண் இயந்திரங்கள் மற்றும் அது சார்ந்த பொருள்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள எஸ்கார்ட்ஸ் நிறுவனம், அதிக செயல் திறன் கொண்ட டிராக்டர்களையும் தயாரிக்கிறது. இந்நிறுவனம் "இனாமி ரிட்டு' என்ற பெயரில் தமிழக விவசாயிகளுக்கு விழாக்கால சலுகையை அறிவித்துள்ளது. இதன்படி எஸ்கார்ட்ஸ் ஜோஸ் 335 மாடல் டிராக்டர் சலுகை விலையில் அளிக்கப்படும்.

இத்துடன் குலுக்கல் அடிப்படையில் அதிர்ஷ்டசாலி விவசாயிகளுக்கு மோட்டார் சைக்கிள், கார் உள்ளிட்ட பரிசுகளும் வழங்கப்படும் என இந்நிறுவனம் அறிவித்துள்ளது.

÷35 எச்.பி. திறன் கொண்ட டிராக்டர் மாடல்களில் மிகவும் பிரபலமானது ஜோஸ் மாடல். கரும்பு மற்றும் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மிகவும் ஏற்றது. இதன் அடக்க விலை | 3.98 லட்சமாகும்.

விழாக்கால சலுகையாக இது | 3.50 லட்சத்துக்கு வழங்கப்படும் என்று நிறுவனத்தின் முதன்மை செயல் அதிகாரி ரோட்டாஸ் மால் தெரிவித்துள்ளார்.

**பொள்ளாச்சியில் மல்லிகைப் பூ கிலோ ரூ. 900!**

First Published : 23 Aug 2010 09:06:36 AM IST

பொள்ளாச்சி, ஆக. 22: பொள்ளாச்சி மொத்த பூ விற்பனை மார்க்கெட்டில் ஞாயிற்றுக்கிழமை நடந்த ஏலத்தில் மல்லிகைப் பூ கிலோ ரூ.900-க்கு விற்பனையானது.

ஆவணி மாதத்தில் ஞாயிற்றுக்கிழமை அதிக அளவில் திருமணங்கள் நடந்தன. இதனால் பூக்களுக்குத் தேவை மிகவும் அதிகரித்தது. மேலும் கேரள மாநிலத்தில் திங்கள்கிழமை கொண்டாடப்படும் ஓணம் பண்டிகைக்கு அதிக அளவில் பூக்கள் தேவைப்படுகின்றன.

பொள்ளாச்சியில் இருந்து அதிக அளவில் காய்கறிகள் மற்றும் பூக்கள் கேரளத்துக்குக் கடந்த சில தினங்களாகக் கொண்டு செல்லப்படுகின்றன. தேவை அதிகரித்ததால் பொள்ளாச்சி மார்க்கெட்டில் மல்லிகைப் பூ கிலோ ரூ.900-க்கு ஞாயிற்றுக்கிழமை ஏலம் போனது. சம்பங்கி கிலோ ரூ.500, செவ்வந்தி ரூ.300-க்கு ஏலம் போனது.

**நீர்-நிலவளம் திட்டம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி**

First Published : 23 Aug 2010 06:16:32 AM IST

மதுராந்தகம்,ஆக.22: மதுராந்தகத்தில் வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் நீர்வளம்-நிலவளம் குறித்த விவசாயிகளுக்கான பயிற்சி கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

÷கூட்டத்தில்,மதுராந்தகம், செய்யூரில் உள்ள 109 ஏரிகள் சீரமைப்பு, ஏரிகளின் எல்லையை நிர்ணயிப்பது, வண்டல் மண் சேகரிப்பு, சணப்பு விதை வழங்குதல், செம்மை நெல் சாகுபடி, சொட்டு நீர் பாசனம், தெளிப்பு நீர் பாசனம், பண்ணை குட்டை அமைத்தல், நவீன் வேளாண்மை கருவிகள் ஆகியவை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டன. இக் கூட்டத்தில் 160 விவசாயிகள் பயனடைந்தனர்.

÷இக் கூட்டத்திற்கு வேளாண்மை பொறியியல் துறையின் செயற்பொறியாளர் இன்பநாதன் தலைமை தாங்கினார். உதவி செயற்பொறியாளர் புனிதவேல் வரவேற்றார்.

÷பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் ஜெகராஜ், உதவி வேளாண்மை இயக்குநர்கள் ஏழுமலை, வெங்கடசுப்பிரமணியன் உள்ளிட்ட அலுவலர்கள் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர். இளநிலை பொறியாளர் பிரின்ஸ்முத்துராஜ் நன்றி கூறினார்.

**தொடர் மழை அணை, ஏரிகளில் நீர்மட்டம் உயர்வு**

First Published : 23 Aug 2010 10:15:41 AM IST

தருமபுரி, ஆக. 22: கடந்த 4 நாள்களாகப் பெய்துவரும் தொடர் மழையால், தருமபுரி மாவட்டத்தில் உள்ள அணைகள், ஏரிகள் மற்றும் கிணறுகளில் நீர் மட்டம் உயர்ந்துள்ளது.

தென்மேற்கு பருவமழை தொடங்கும் முன், வெப்ப சலனத்தால் ஏற்பட்ட வானிலை மாற்றம் காரணமாக தமிழ்நாட்டில் பரவலாக கனமழை பெய்துவருகிறது.

தருமபுரி மாவட்டத்தில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து அதிக வறட்சி நிலவியிருந்த நிலையில், தற்போது பெய்துவருகிறது. இதனால், மாவட்டத்திலுள்ள அணைகளுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.

மாவட்டத்தில் அதிகபட்சமாக காரிமங்கலத்தில் 235 மி.மீ. மழை அளவு (வெள்ளிக்கிழமை நிலவரம்) பதிவாகியுள்ளது. இப்பகுதியில் தொடர்ந்து மழை பெய்வதால், இந்த ஒன்றியத்தில் உள்ள 30 ஏரிகளில் தண்ணீர் நிரம்பும் நிலையில் உள்ளது.

இதேபோல், பாலக்கோடு வட்டத்திலுள்ள தும்பலஹள்ளி, கேசர்குளி அணைகளிலும் நீர் மட்டம் உயர்ந்துவருகிறது.

தண்ணீர் கரைபுரண்டது:

காரிமங்கலத்தில் உள்ள நாகனம்பட்டி, குட்டூர் ஏரிகள் நிரம்பி தண்ணீர் கரைபுரண்டுள்ளது. இதேபோல், தருமபுரி, வத்தல்மலையிலிருந்து உற்பத்தியாகும் சனத்குமார் நதியில் வெள்ளம்

கரைபுரண்டு ஓடுகிறது. இதனால், மதிகோன்பாளையம் ஏரி, ராமக்காள் ஏரி, கடகத்தூர் ஏரிகளில் நீர் நிரம்பும் நிலை ஏற்பட்டுள்ளது.

மாவட்டத்திலுள்ள 6 அணைகளிலும் நீர் மட்டம் உயர்ந்துவருகிறது. மேலும் 150-க்கும் மேற்பட்ட ஏரிகள் நிரம்பும் நிலையில் உள்ளன. இதனால், விவசாய கிணறுகளிலும் நீர்மட்டம் உயரும் வாய்ப்பு உள்ளது.

**ஆக. 25-ல் திருவாரூரில் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

First Published : 22 Aug 2010 12:07:46 PM IST

Last Updated : 22 Aug 2010 12:33:56 PM IST

திருவாரூர், ஆக. 21: திருவாரூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கருத்தரங்கக் கூடத்தில் புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் எம். சந்திரசேகரன் தலைமை வகிப்பார். கூட்டத்தில் திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னோடி விவசாயிகள் மற்றும் விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்று, தங்களது கோரிக்கைகளை தெரிவித்து பயன்பெறலாம்.

கூட்டத்தில் விவசாயிகள் தெரிவிக்கும் கோரிக்கைகளை அரசு அலுவலர்கள் குறிப்பு எடுத்துக் கொண்டு, கோரிக்கைகள் இருந்தால், அன்றைய தினம் மாலையில் மாவட்ட ஆட்சியர் நடத்தும் தொடர் நடவடிக்கைக் கூட்டத்திலும் பங்கேற்க வேண்டுமென ஆட்சியர் அலுவலக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆக.27 திண்டுக்கல்லில் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

First Published : 23 Aug 2010 10:29:19 AM IST

திண்டுக்கல், ஆக. 22: திண்டுக்கல் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் ஆகஸ்ட் 27-ம் தேதி நடைபெற உள்ளது.

கடந்த ஜூலை மாதம் 30-ம் தேதி நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது விவாதிக்கப்பட உள்ளது. கோரிக்கை மனுக்கள் மீது துரித நடவடிக்கை எடுக்கும் வகையில் இனி வரும் கூட்டங்களில் விவசாயிகள் மனுக்களின் இரு நகல்களை வழங்க வேண்டும். சென்ற கூட்டத்தின்போது கொடுக்கப்பட்ட மனுக்கள் மீதான பதில்கள் விவசாயிகளின் பார்வைக்காக மனுக்கள் பதியும் இடத்தில் வைக்கப்படும்.

எனவே விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என ஆட்சியர் மா.வள்ளலார் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கேட்டுக் கொண்டுள்ளார்.

**மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்களாக விற்பனை செய்ய யோசனை**

First Published : 23 Aug 2010 11:23:51 AM IST

கரூர், ஆக. 22: வேளாண் பொருள்களை மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்களாக மாற்றி சந்தையில் விற்று லாபம் பெறலாம் என்றார் தோட்டக்கலை உதவி இயக்குநர் லூ. சொர்ணமாணிக்கம்.

தாந்தோன்றிமலை வட்டாரத் தோட்டக்கலைத் துறை சார்பில், உப்பிடமங்கலத்தில் அண்மையில் நடைபெற்ற ஆடிப்பட்ட காய்கறி சாகுபடி பயிற்சி முகாமை தொடக்கிவைத்து மேலும் அவர் பேசியது:

மக்கள் தங்களின் ஆரோக்கியமான வாழ்விற்கு காய்கறிகளை நாள்தோறும் போதுமான அளவு உணவில் சேர்த்துக் கொள்ளவதில்லை. இதற்கு காரணம் போதிய அளவு காய்கறிகள் உற்பத்தி செய்யப்படுவதில்லை.

எனவே, காய்கறிகள் பயிரிடுவதை ஊக்குவிக்க தோட்டக்கலைத் துறை மூலமாக பல்வேறு பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. விவசாயிகள் தங்களது விளைபொருள்களை மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்களாக மாற்றி உபயோகிப்பாளர்களுக்கு நேரடியாக விற்பனை செய்தால் கூடுதல் லாபம் பெறலாம்.

மேலும், விவசாயிகள் குழுக்களாகச் சேர்ந்து விளைபொருள்களை மதிப்புக்கூட்டப்பட்ட பொருள்களாக மாற்றி, இடைத்தரகர்களின்றி நேரடியாக உபயோகிப்பாளர்களை சென்றடையும் வகையில், உழவர் சந்தைகளில் விற்பனை செய்யலாம் என்றார் அவர்.

ஆடிப்பட்டத்தில் காய்கறி சாகுபடியை ஊக்குவிக்கும் பொருட்டு, மத்திய, மாநில அரசுகள் பல்வேறு மானியத் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன.

ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், 50 சத மானிய விலையில் காய்கறி விதைகள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

மேலும், காய்கறி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு நுண்ணீர்பாசனத் திட்டத்தின் கீழ் 65 சத மானியத்தில் சொட்டுநீர்ப் பாசனக் கருவிகள் நிறுவப்படும் என்றார் தோட்டக்கலை அலுவலர் நடராஜன்.

இந்த முகாமில் உப்பிடமங்கலம், லட்சுமணப்பட்டி, லிங்கத்தூர், பொரணி, பாலம்மாள்புரம், சின்னகவுண்டன்புதூர், ராசாகவுண்டனூர், பாப்புரெட்டியூர், கருப்பூர், புதுரெங்கபாளையம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர்.

தோட்டக்கலை உதவி அலுவலர்கள் பரமேஸ்வரன், சுமதி, செந்தில்குமார் உள்ளிட்டோர் பேசினர்.

**10,000 கறவை மாடுகளுக்கு 50 சதம் மானியத்தில் காப்பீடு**

First Published : 23 Aug 2010 10:39:58 AM IST

மதுரை, ஆக. 22: மதுரை மாவட்டத்தில், நடப்பு நிதியாண்டில் 50 சதவிகித மானியத்தில் 10 ஆயிரம் கறவை மாடுகளுக்கு காப்பீடு வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக, மாவட்ட ஆட்சியர் சி. காமராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

இதில், கால்நடை பராமரிப்புத் துறை மூலம் 5 ஆயிரம் மாடுகளுக்கும், ஆவின் மூலம் 5 ஆயிரம் மாடுகளுக்கும் காப்பீடு செய்யப்பட உள்ளன.

காப்பீட்டுத் தொகைக்கான பிரீமியத்தில் 50 சதவிகிதம் அரசு மானியமாக வழங்கப்படும். மீதி 50 சதவிகிதத் தொகையை கறவை மாடுகளை வளர்ப்போர் செலுத்த வேண்டும். இந்நிலையில், காப்பீடு செய்யப்படும் மாடுகள் எதிர்பாராதவிதமாக இறக்க நேரிட்டால், காப்பீட்டுத் தொகை முழுவதும் மாடுகளை வளர்க்கும் உரிமையாளருக்கே வழங்கப்படும்.

மேலும், கறவை மாடுகளின் வயது இரண்டரை முதல் 8 வயதுக்குள் இருக்க வேண்டும். பால் கறப்பவை, பால் வற்றியவை மற்றும் ஏற்கெனவே கன்று ஈன்ற சினை மாடுகளுக்கும் இத்திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யலாம். ஒரு நபருக்கு அதிகபட்சம் 2 கறவை மாடுகளுக்கு மானியத்தில் காப்பீடு செய்யப்படும். எனவே, கறவை மாடுகள் (பசு மற்றும் எருமை) வளர்ப்போர் தங்களுக்கு அருகில் உள்ள கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவர்கள் மற்றும் ஆவின் கால்நடை உதவி மருத்துவர்களை அணுகி, தங்களின் கறவை மாடுகளுக்கு காப்பீடு செய்துகொள்ளலாம் என்று ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**நுண்நீர் பாசன முறை செயல் விளக்க முகாம்**

First Published : 23 Aug 2010 11:53:26 AM IST

நாகப்பட்டினம், ஆக. 22: நாகை மாவட்டம், சிக்கலில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில் நுண் நீர் பாசன முறை செயல்விளக்க முகாம் அண்மையில் நடைபெற்றது.

வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் தங்க. தாமோதரன் தலைமை வகித்தார்.

நபார்டு வங்கியின் உதவி பொது மேலாளர் வேணுகோபால், காரைக்கால் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ராஜேந்திரன், வேளாண் பொறியியல் துறை இணைப் பேராசிரியர் ஜான். குணசேகர் ஆகியோர் நுண் நீர் பாசன முறையின் அவசியம் மற்றும் பயன்களை விளக்கி பேசினர்.

சொட்டு நீர் பாசனக் கருவிகள், கால்களால் இயக்கக் கூடிய பம்பு மற்றும் தெளிப்பு நீர் பாசனக் கருவிகளின் செயல்பாடுகள் குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

சுமார் 150 விவசாயிகள், வேளாண் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சன்ன ரக விதை நெல் நிறுத்தம் : விவசாயிகள் கவலை**

First Published : 23 Aug 2010 11:51:48 AM IST

சீர்காழி, ஆக. 22: நாகை மாவட்டம், சீர்காழி வேளாண்மை விரிவாக்க மையத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்த பி.பி.டி. என்றழைக்கப்படும் ஆந்திர பொன்னிக்கான சன்ன ரக விதை நெல் வழங்குவது திடீரென நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், இந்தப் பகுதி விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

இதனிடையே, இந்த ரக விதை நெல் நம் ஊரின் சூழலுக்கு ஏற்றது அல்ல என்ற வேளாண் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களின் கருத்தால் விவசாயிகள் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளனர்.

வழக்கத்துக்கு மாறாக, இந்த ஆண்டு, ஜூலை 28 ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட்டது. போதிய அளவு தண்ணீர் இல்லாததால், குறைந்த அளவே தண்ணீர் திறக்கப்பட்டது. இந்தத் தண்ணீர் காவிரி டெல்டாவின் கடைமடைப் பகுதியான சீர்காழிக்கு இதுவரை வரவில்லை.

இதனால், குறுவை நெல் சாகுபடி பொய்த்துள்ளது. மோட்டார் வைத்து விவசாயப் பணிகளை மேற்கொள்ளலாம் என்றால், டீசல் விலை உயர்வு, மின்சாரம் தட்டுப்பாடு, ஆள் பற்றாக்குறை உள்ளிட்ட காரணங்களால் விவசாயிகளுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது.

இந்தப் பகுதி விவசாயிகள் சன்ன ரக நெல்லான ஆடுதுறை 38, 39, 46 உள்ளிட்டவற்றை சாகுபடி செய்து வந்தனர். அதிக தண்ணீர் தேவைப்படும் இந்த ரகம் 145 நாள் பயிராகும். இதில் தற்போது வீரியம் குறைந்ததால் மகசூல் இழப்பு ஏற்படுகிறது. அதிக முதலீடு தேவைப்படும் இந்த ரகம் சந்தையில் குறைந்த விலைக்கே போவதால், விவசாயிகள் தொடர்ந்து நஷ்டத்தையே சந்தித்து வந்தனர்.

இந்நிலையில், தற்போதைய தண்ணீர் தட்டுப்பாட்டுக்கு ஏற்ற ரகமான ஆந்திர பொன்னி (பி.பி.டி.) என்றழைக்கப்படும் சன்ன ரக விதை நெல்லையே கடந்த 5 ஆண்டுகளாக சீர்காழி பகுதி விவசாயிகள் பயிரிட்டு வந்தனர். இது 135 நாள் பயிராகும். மழைக் காலத்துக்கும், பள்ளமான பகுதிக்கும் ஏற்றதாகக் கருதப்படும் இந்த நெல்லைப் பயிரிட முதலீடும் குறைவு; லாபமும் அதிகம். மாறிவரும் காலநிலைக்கு ஏற்றது.

கடந்த ஆண்டில் சீர்காழி வேளாண்மை விரிவாக்க மையத்தின் மூலம் இந்த பி.பி.டி. விதை நெல்லை மானிய விலையில் விவசாயிகள் கொள்முதல் செய்தனர். மேலும், தனியார் கடைகளிலும் அரசின் மானிய விலையிலேயே விதை நெல் வழங்கப்பட்டது.

இந்நிலையில், பி.பி.டி. விதை நெல் விற்பனையை சீர்காழி வேளாண்மை அலுவலகம் திடீரென நிறுத்திவிட்டது. இது விவசாயிகளிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து சீர்காழி வேளாண்மை உதவி இயக்குனர் ராமகிருஷ்ணன் கூறியது:

பி.பி.டி. நெல் இந்தப் பகுதி சூழ்நிலைக்கு ஏற்றது அல்ல என்று வேளாண் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த ரக நெல்லால் புகையான் தாக்குதல், நோய்களை எளிதில் கட்டுப்படுத்த முடியாது.

மேலும், வெளிமாநிலங்களில் அதிக விலைக்கு கொள்முதல் செய்து, விவசாயிகளுக்கு குறைந்த விலையில் மானிய விலையில் விற்பனை செய்ய வேண்டி உள்ளது. மேலும், இந்த ரகத்தில் கலப்பு அதிகம் வருவதாக விவசாயிகள் புகார் தெரிவிக்கின்றனர். இதுதொடர்பாக, வேளாண் அதிகாரிகள் மீது நீதிமன்றத்திலும் வழக்குத் தொடருகின்றனர். மத்திய அரசின் அங்கீகாரம் பெற்றுள்ளதால், பி.பி.டி. நெல்லை தனியார் கடைகளிலும் விவசாயிகள் மானிய விலையில் வாங்கிக் கொள்ள முடியும் என்றார் அவர்.

இத்தகைய காரணங்களாலேயே இந்த ரக விதை நெல் வழங்குவது நிறுத்தப்பட்டிருக்கலாம் என்கின்றனர் இந்தப் பகுதி விவசாயிகள்.

இதுகுறித்து திருவாலி ஏரிப்பாசன முன்னோடி விவசாயி வி.ஆர். ராமநாதன் கூறியது:

பி.பி.டி. நெல் மூலம் குறைந்த நாளில் மகசூல் எடுக்க முடியும். விவசாயச் செலவும் குறைவு. மகசூல் இழப்பு ஏற்பட்டாலும் சந்தையில் அதிக விலைக்கு போகிறது. முக்கியமாக தண்ணீர் தட்டுப்பாட்டுக்கு ஏற்றது. விவசாயிகளின் நலன் கருதி, பி.பி.டி. விதை நெல்லை வேளாண்மை விவாக்க மையத்தில் மூலம் விற்பனை செய்ய வேண்டும் என்றார் அவர்.

தற்போதைய தண்ணீர் தட்டுப்பாடு, விவசாயிகளுக்கு கிடைக்கும் லாபம், விவசாயிகளின் நலன் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, வேளாண் விரிவாக்க மையத்தின் மூலம் மானிய விலையில் பி.பி.டி. விதை நெல்லை வழங்க அரசு முன்வர வேண்டும் என்பதே இந்தப் பகுதியின் பெரும்பாலான விவசாயிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது.

தினமலர்

**திடீர் மழை விவசாயிகள் அச்சம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 23,2010,02:17 IST

பொன்னேரி : பொன்னேரி மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் இருநூறுக்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இங்கு சம்பா சாகுபடிக்காக நெல் பயிர் நட்டுள்ளனர். தற்போது இவை வளர்ந்து அடுத்த சில நாட்களில் அறுவடைக்கு தயாராக உள்ளது.இந்நிலையில் சில நாட்களுக்கு முன் பெய்த மழையில், ஒரு சில இடங்களில் வளர்ந்த நெற்கதிர்கள் தரையில் படுத்துவிட்டன. இதை அறுவடை இயந்திரம் மூலம் அறுவடை செய்யும்போது அதில் நெற்கதிர்கள் சிக்கி

வீணாகும். இதனால், அடுத்த இருபது நாட்களுக்கு மழை வராமல் இருக்க வேண்டுமே என விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

**விவசாயக் கூலியை சமாளிக்க புதிய திட்டம் அறிமுகம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 24,2010,01:21 IST

கடலூர் : விவசாயக் கூலி தட்டுப் பாட்டை சமாளிக்க தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் புதிய "பசுமைப்படை' திட்டம் அறிமுகப்படுத்த உள்ளனர். மத்திய அரசின் திட்டமான கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டத்தில் கிராமங்களில் உள்ள விவசாய கூலிகளுக்கு 100 ரூபாய் சம்பளம் கிடைக்கிறது. ஆண், பெண்களுக்கு சமமான ஊதியம் என்பதால் பெரும்பாலான பெண் கூலித் தொழிலாளர்கள் வேலை உறுதியளிப்புத் திட்டத்திற்கு சென்று பணி செய்ய ஆர்வம் காட்டுகின்றனர். ஆனால் அதிகமாக கூலி கொடுத்து செய்யும் விவசாயம் லாபகரமாக இருக் காது என்பதால், பெரும் பாலான விவசாயிகள் சவுக்கு, எண்ணெய் பனை, மூங்கில், முருங்கை, தென்னை போன்ற பயிர் களை பயிரிட துவங்கியுள்ளனர். இதனால் நாட் டில் விவசாயம் குறைந்து உணவு உற்பத்தி கடுமையாக பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதை உணர்ந்த வேளாண்துறை களை பறிக்கும் கருவி, நடவு கருவி உட்பட பல்வேறு இயந்திரங்களைக் கண்டுபிடித்து அர்ப்பணித்துள்ளது. இருப்பினும் இதை இயக் குவதற்கு குறைந்த பட்ச கூலியாட்கள் தேவைப்படுவதால் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் புதிய அமைப்பை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இந்த "பசுமைப் படை அமைப்பு' விவசாயிகள் மத்தியில் பெரும் வரவேற்பை பெறும் என எதிர்பார்க்கப் படுகிறது. கடலூர் மாவட்டத்தில் 166 தொடக்க வேளாண் மைக் கூட்டுறவு வங்கிகள் உள்ளன. அவற்றில் கரைமேடு, ஆயங்குடி, கருங் குழி, குறிஞ்சிப்பாடி உட் பட 5 தொடக்க வேளாண் மைக் கூட்டுறவு வங்கிகள் தேர்வு செய்யப்பட்டுள் ளன. இந்த வங்கிகளில் அங்கத்தினர்களாக உள்ள விவசாயிகளை இணைத்து "பசுமைப்படை' என்கிற அமைப்பை உருவாக்கி அவர்கள் மூலம் விவசாயிகளுக்கு இயந்திரங்களைக் கொண்டு நடவு செய்து கொடுக்கும் திட்டத்தை உருவாக்கியுள்ளனர். இதன் மூலம் ஏக்கர் ஒன்றுக்கு நடவு செய்து கொடுக்க குறைந்தபட்சத் தொகையை விவசாயிகளிடமிருந்து வசூல் செய்து கொள்கின்றனர். நடவுப் பணி முடிந்ததும் களை எடுப்பது, உரம் போடுவது, நீர் நிர்வாகம் போன்றவற்றை கூலியாட்களின்றி விவசாயிகள் எளிதில் பயிர் செய்ய முடியும். மேலும் களை எடுப்பது உள்ளிட்ட மற்ற பணிகளையும் இயந் திரங்களைக் கொண்டு செயல்படுத்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் இயந்திரங்கள் வாடகைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

இது குறித்து கீழமூங்கிலடி கிராமத்தில் பசுமைப் படை விவசாயிகளுக்கு நவீன இயந்திரங் கள் கையாளுதல் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. கடலூர் மத்திய கூட்டுறவு வங்கி தனி அதிகாரி மிருணாளினி கூறும் போது, "இந்த பசுமைப் படை திட்டம் பரிச்சார்த்தமாக செய்யப்படுகிறது. இயந்திரங்கள் மூலம் நாற்றுவிடுவது, நடவு செய்வது பற்றி விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டம் சிறப்பாக அமையுமானால் மேலும் விரிவுபடுத்தப்படும்' என்றார்.

**பட்டுப்பூச்சி வளர்ப்பில் விவசாயிகள் ஆர்வம் : வங்கி கடனுதவி வழங்க வேண்டும்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 24,2010,01:47 IST

அவலூர்பேட்டை : விழுப்புரம் மாவட் டத்தில் பட்டுப்பூச்சி வளர்ப்பு தொழிலில் விவசாயிகள் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். அரசு மானிய உதவி வழங்கப்பட்டு வரும் நிலையில், வங்கி கடனுதவி உள்ளிட்ட சலுகைகள் வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். மேல்மலையனூர் ஒன்றியம் அவலூர் பேட்டை ஊராட்சிக்குட் பட்ட ரவணாம்பட்டு கிராமத்தில் பட்டு பூச்சி வளர்ப்பு மையம் உள்ளது. இப்பகுதியில் 15 விவசாயிகள் தொடர்ந்து பட்டு பூச்சி வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். இதற்கான முட்டைகளை தர்மபுரியிலிருந்து விவசாயிகள் வாங்கி வருகின்றனர். இந்த முட்டைகளை ஈரமான துணிப்பையில் குளிர்ந்த தட்ப வெப் பத்துடன் பாதுகாக்கின்றனர். ஒரு வாரத்திற்கு பின் னர் வெள்ளை முட்டை கருப்பாகி விடும், இதை கருப்பு பேப்பரில் மூடி வைக்கின்றனர். இதிலிருந்து 24 மணி நேரம் கழித்து புழு வெளியேறுகிறது. இந்த புழுக்களுக்கு மல்பரி தழையை சிறிய அளவில் வெட்டி தினம் மூன்று வேளைக்கு போடுகின்றனர். மூன்று நாள் கழித்து புழு தோல் உரிக்கும். 24 மணி நேரம் கழித்து தோலிலிருந்து புழு வெளியேறும். மீண்டும் தழையை அதிகளவு போடவேண்டும்.

இதே போல் தோல் உரி பருவத்தை தொடர்ந்து 23ம் நாளில் புழு கூடு கட்ட ஆரம்பிக்கும். பின்னர் 3 அல்லது 4 நாட்கள் கழித்து தர்மபுரியில் உள்ள அரசு பட்டுப்புழு அங்காடிக்கு விற்பனைக்காக பஸ்சில் விவசாயிகள் எடுத்து செல்கின்றனர். அங்கு தரத்திற்கு ஏற்ப கூடு கட்டிய பட்டுப்புழுக்கள் பகிரங்க ஏலம் விடப்படுகிறது. இப்பகுதியில் அதிகமாக மஞ்சள் கூடு வளர்ப்பில் தான் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். ஒரு கிலோ அதிக பட்சமாக 170 ரூபாய் முதல் 230 ரூபாய் வரை விலை போகி றது. ஒவ்வொரு விவசாயியும் அதிகபட்சமாக 40 கிலோ புழுக்களை உற் பத்தி செய்கின்றனர். இன் னும் அதிகளவில் செய்வதற்கு மூல தனம் இல்லை என தெரிவிக்கின்றனர். ஆண்டிற்கு 4 முறை இத் தொழிலை செய்கின்றனர். மழை மற்றும் கோடை வெப்பத்தில் பட்டுப்புழு வளர்ப்பில் ஈடுபட முடியாது என விவசாயிகள் தெரிவித்தனர். ரவணாம்பட்டில் உள்ள பட்டுப்புழு வளர்ப்பு விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் வங்கி கடன் உதவி வழங்கிட கலெக்டர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரசு மானியம் உண்டு வங்கி கடன் கிடைக்குமா? : பட்டுப்பூச்சி வளர்ப்புக்கு அரசு மானிய நிதி உதவி வழங்கப்படுகிறது. ஆனால் பாங்க் கடனுதவி கிடைப்பதில்லை என பட்டுப்பூச்சி வளர்ப்போர் தெரிவிக்கின்றனர். திருவெண்ணெய்நல்லூர் அடுத்த சின்னசெவலை பகுதியில் பட்டுப் பூச்சி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள நடராஜன் கூறுகையில், எனக்கு சொந்தமான நிலத்தில் பட்டுப்பூச்சி வளர்த்து வருகிறேன். பட்டுப்பூச்சியின் உணவுக்காக மல்பரி தழைகளை அங்கேயே பயிரிட்டு பூச்சிகளுக்கு வழங்கப்படுகிறது. இந்த தழைகளை உண்ணும் பூச்சிகள் எச்சத்தின் வழியாக பட்டு கூடுகளை வெளியாக்கி சுருட்டிக் கொள்கிறது. பின் இதனை சேகரித்து தர்மபுரி, சேலம் போன்ற பகுதிகளுக்கு எடுத்து சென்று விற்கப்படுகிறது. மாதம் ஒரு முறை இந்த பட்டு பூச்சிகள் வெளியிடும் பட்டு கூடுகள் 150 முதல் 200 கிலோ விற்கப்படுகிறது. பின் பட்டு பூச்சிகளின் முட்டைகளை வாங்கி வந்து பின் அதனை பெருக்கி பூச்சிகள் மூலம் பட்டு கூடுகள் உற்பத்தி செய்யப்படுகிறது.  பட்டு பூச்சி வளர்ப்பிக்காக அரசு மானியமாக 50 ஆயிரம் ரூபாய் வழங்கி உள்ளது. பராமரிப்புக்காக இங்குள்ள வங்கியில் 25 ஆயிரம் ரூபாய் கடனுதவி கேட்டும் கிடைக்கவில்லை. வங்கி கடன் கிடைக்க அரசு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

**திடீர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2010,01:26 IST

விழுப்புரம் : விழுப்புரம் மாவட்டத் தில் நேற்று முன் முதல் பரவலாக மழை பெய்யும் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தமிழகத்தில் கடந்த ஜூலை மாதம் முதல் பரவலாக தென்மேற்கு பருவ மழை பெய்து வருகிறது. நேற்று முன் தினம் மாலை முதல் தொடர்ந்து விழுப்புரம் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்கிறது.
நேற்று காலை 8 மணி வரை மாவட்டத்தில் தாலுகா வாரியாக மழை விவரம்: விழுப்புரத்தில் 43 மி.மீ., திண்டிவனத்தில் 14 மி.மீ., திருக்கோவிலூரில் 120 மி.மீ., உளுந்தூர் பேட்டையில் 45 மி.மீ., கள்ளக்குறிச்சியில் 165 மி.மீ., மற்றும் சங்கராபுரத்தில் 145 மி.மீ., அளவும் மழை பெய்துள்ளது. தொடர்ந்து நேற்று பகல் முழுவதும் பரவலாக கன மழை பெய்ததால் ஏரி, குளம், குட்டைகளில் நீர் மட்டம் அதிகரித்து வருகின்றன. மணிலா, உளுந்து, துவரை, தினை உள்ளிட்ட மானாவாரி பயிர் செய்துள்ள விவசாயிகள் மழையால் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**மானிய விலையில் விதை நெல் வழங்கல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 24,2010,01:59 IST

உளுந்தூர்பேட்டை : உளுந்தூர்பேட்டை அடுத்த எம்.குன்னத்தூரில் விவசாயிகளுக்கு மானிய விலையில் விதை நெல் வழங்கும் விழா நடந்தது. ஊராட்சி தலைவர் சடையன் தலைமை தாங்கினார். வேளாண் அலுவலர்கள் சுப்ரமணியன், தெய்வநிதி முன்னிலை வகித்தனர். வேளாண் உதவி இயக்குனர் ரவீந்திரன் வரவேற்றார். மாவட்ட துணை இயக்குனர் அன்பழகன் விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் நெல் விதைகள் மற்றும் நுண்ணுயிர் பொட்டலங்கள் வழங்கினார். உதவி அலுவலர்கள் மாயவன், சுதர்சன், தியாகராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**கனமழையால் கம்பு பயிர் சேதம் தியாகதுருகம் விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 24,2010,02:22 IST

தியாகதுருகம் : கனமழை பெய்ததால் தியாகதுருகம் பகுதியில் மானாவாரியில் பயிரிடப்பட்டிருந்த கம்பு பயிர்கள் சேதம்டைந்தன. விழுப்புரம் மாவட்டம் தியாகதுருகம் பகுதியில் கடந்த 7 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு இவ்வாண்டு 1,600 ஏக்கர் பரப்பில் மானாவாரி நிலங்களில் கம்பு பயிரிடப்பட்டுள்ளது. குறித்த நேரத்தில் மழை பெய்ததால் விவசாயிகள் தங்களின் நிலங்களில் ஆர்வமுடன் கம்பு சாகுபடி செய்தனர். அவ்வப்போது பெய்த மழையால் கம்பு பயிர் நன்கு வளர்ந்து தற்போது அறுவடைக்கு தயாரான நிலையில் இருக்கிறது. கடந்த 20ம் தேதி இரவு துவங்கி இரு தினங்களாக தியாகதுருகம் பகுதியில் பரவலாக நல்ல மழை பெய்தது. காற்றும் வீசியதால் கம்பு பயிர் உடைந்து நிலத்தில் சாய்ந்தது. அறுவடை செய்யும் தருணத்தில் பல நூறு ஏக்கர் பரப்பில் கம்பு பயிர்கள் உடைந்து மண்ணில் சாய்ந்ததால் விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது. பல இடங்களில் முற்றிய கம்பு கதிர் மண்ணில் புதைந்து முளைத்து சேதமடையும் நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டுகளில் குறித்த நேரத்தில் மழையின்றி போனதால் கம்பு பயிரிடுவதையே விவசாயிகள் தவிர்த்து வந்தனர். இருப்பினும் தற்போது நம்பிக்கையுடன் சாகுபடி செய்த கம்பு பயிர் கனமழையால் சேதமானதால் எதிர்பார்த்த மகசூல் கிடைக்காது என்று விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**முறையான விதை வணிக உரிமம் பெறாதவர்கள் மீது நடவடிக்கை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2010,04:32 IST

சேலம்: "முறையான விதை வணிக உரிமம் பெறாத நர்ஸரி உரிமையாளர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்' என, விதை ஆய்வு துணை இயக்குனர் மணிமொழி எச்சரித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:விதைகள் சட்டம் 1966ன் படி விதைகள் என்பது விதைப்பதற்காக அல்லது நடுவதற்காக பயன்படுத்தப்படும் பின்வரும் வகைகளின் விதைகள், நாற்றுக்கள் என பொருள் படும்.உணவுப் பயிர்களின் விதைகள் ( உணவிற்காக பயன்படும் எண்ணெய் வித்துக்கள், பழங்கள், காய்கறிகளின் விதைகள் அடங்கும்), பருத்தி விதைகள், கால்நடை தீவன விதைகள், சணல் விதைகள் போன்ற விதைகளுக்கு அனைவரும் உரிமம் பெற்றிருக்க வேண்டும்.

அலங்காரச் செடிகள் மற்றும் வாசனை பயிர்கள் நீங்கலாக அனைத்து வகை நர்ஸரிகள், நாற்றாங்கால், நாற்றுப் பண்ணைகள் ஆகியவை அடங்கும். நர்ஸரிகள், தென்னை நாற்றாங்கால், காய்கறி நாற்றுப் பண்ணைகள், பழச்செடிகள் விற்பனை செய்யும் நர்ஸரி உரிமையாளர்கள் விதை வணிகம் உரிமம் பெறாமல், வணிகம் செய்வது, விதைகள் விற்பது சட்டப்படி குற்றம்.எனவே, உரிமம் பெறாமல் உள்ள நர்ஸரி உரிமையாளர்கள் உடனடியாக விதை வணிக உரிமம் பெற்று விற்பனை செய்ய வேண்டும். உரிமம் பெறாமல் விதைகளை விற்பனை செய்பவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.நர்ஸரி உரிமையாளர்கள் விதை வணிக உரிமம் பெற, ஈரோடு பெருந்துறை ரோட்டில் இயங்கிவரும் விதை ஆய்வு துணை இயக்குனர் அலுவலகத்தை நேரில் அணுகலாம்.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**வேளாண் மையத்தில் நெல் விதை இருப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 24,2010,03:18 IST

நாமக்கல்: "புதுச்சத்திரம், புதன்சந்தை, திருமலைப்பட்டி வேளாண் விரிவாக்க மையத்தில் விவசாயிகளுக்கு தேவையான நெல் விதை இருப்பு வைக்கப்பட்டுள்ளது' என, வேளாண் உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை: புதுச்சத்திரம் வட்டாரத்தில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் செம்மை நெல் சாகுபடி முறையை பின்பற்றி அதிக வருவாய் ஈட்டலாம். இம்முறையில் சாகுபடி செய்ய ஏக்கருக்கு மூன்று கிலோ விதை போதுமானது. அந்த விதையை ஒரு சென்ட் அளவு நாற்றங்காலில் மேட்டுப்பாத்தி அமைத்து விதைக்க வேண்டும். அதனால் நல்ல நாற்றை உற்பத்தி செய்யலாம்.

பயிரிட்ட 14 நாட்களில் நாற்றுகளை பறித்து 25 சென்டிமீட்டர் இடைவெளியில் ஒரு குத்துக்கு ஒரு நாற்று வீதம் சதுர முறையில் நடவு செய்ய வேண்டும். கோனாமீட்டர் களையெடுக்கும் கருவியை பயன்படுத்தி நடவு செய்த 16ம் நாள் முதல் 10 நாட்களுக்கு ஒரு முறை களையெடுக்க வேண்டும். அதனால், நெல்பயிரில் வேர் வளர்ச்சி அதிமாகி தூர்கள் வெடிக்கும்.

மண்ணில் காற்றோட்டம் அதிகரித்து வேரின் வளர்ச்சியை துரிதப்படுத்தும். இலை வண்ண அட்டையை பயன்படுத்தி தேவையான உரமிட வேண்டும். அதனால் திரட்சியான நெல்மணிகள் கிடைப்பதுடன் அதிக மகசூல் கிடைக்கும். விவசாயிகளுக்கு தேவையான ஏ.டி.டி., 43 மற்றும் ஏ.டி.டி., 45 நெல் விதைகள் புதுச்சத்திரம், புதன்சந்தை மற்றும் திருமலைப்பட்டி ஆகிய வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டு, கிலோ ஒன்றுக்கு 5 ரூபாய் வீதம் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வங்கிக்கடனை விவசாயிகள் திருப்பிசெலுத்த கலெக்டர் வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 24,2010,03:31 IST

தர்மபுரி: ""மனசாட்சிக்கு பயந்து விவசாயிகள் வங்கிக்கடன்களை திருப்பி செலுத்த வேண்டும்,'' என, விவசாயிகள் குறை தீர் கூட்டத்தில் கலெக்டர் அமுதா தெரிவித்தார்.தர்மபுரி மாவட்ட விவசாயிகள் குறை தீர் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. கலெக்டர் அமுதா தலைமை வகித்தார். மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் மனோகரன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் பேசிய விவசாயிகள், "தோட்டக்கலை பயிர்களுக்கு மின்சார கட்டணத்தில் சலுகை அளிக்க வேண்டும். விவசாயிகளின் குழந்தைகளுக்கு 2009ம் ஆண்டுக்கு முன் பெற்ற கல்விக்கடன் வட்டியை தள்ளுபடி செய்ய வேண்டும். வறட்சி காலத்தில் விவசாயிகளிடம் ஜப்தி நடவடிக்கை எடுக்க கூடாது' என, வலியுறுத்தினர்.விவசாயிகளுக்கு பதிலளித்து பேசிய கலெக்டர் அமுதா, ""பொதுமக்கள் போலியான தகவல்களை நம்பி பணத்தை வங்கியில் செலுத்தி ஏமாறக்கூடாது. விவசாயி கடன் பெற்ற விவசாயிகள் மனசாட்சிக்கு பயந்து தங்களுடைய கடன்களை திருப்பி செலுத்த வேண்டும். தள்ளுபடி கிடைக்கும் என நம்பி தவனை செலுத்தாமல் ஏமாற்ற கூடாது,'' என்றார்.டி.ஆர்.ஓ., மகேஸ்வரி, கலெக்டரின் நேர்முக உதவியாளர் பாலசுப்பிரமணியம், ரிசர்வ் வங்கி துணை பொது மேலாளர் விஜய், இந்தியன் வங்கி துணை பொது மேலாளர் சடகோபன் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**நிலக்கடலை பயிரில் புகுந்து பன்றிகள் அட்டகாசம் : கிருஷ்ணகிரி விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 23,2010,00:57 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி அடுத்த மகாராஜகடை மற்றும் சுற்றுவட்டார கிராமங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலக்கடலை பயிரில் காட்டு பன்றிகள் புகுந்து நாசம் செய்து வருவதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அடர்ந்த வனப்பகுதிகளும், அதிகமான மலை கிராமங்களும் காணப்படுகின்றன. வனப்பகுதியில வாழும் யானைகள், காட்டு பன்றிகள் அடிக்கடி, கிராமங்களை நோக்கி படையெடுத்து விவசாய பயிர்களை நாசம் செய்து வருகின்றன. குறிப்பாக வேப்பனப்பள்ளி மற்றும் மகாராஜகடை, மேகலசின்னம்பள்ளி சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் காட்டு பன்றிகள் புகுந்து பயிர்களை நாசம் செய்வது வாடிக்கையாகி வருகிறது. வன விலங்குகளிடம் இருந்து பயிர்களை பாதுகாக்க, மாவட்ட நிர்வாகத்தையும், வனத்துறையினரையும் விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.
வேப்பனப்பள்ளி, மகாராஜகடை வனப்பகுதியில் காட்டு பன்றிகளும், குரங்குகளும் அதிக அளவில் உள்ளன. இவை அடிக்கடி விளை நிலங்களுக்குள் புகுந்து பயிர்களை முற்றிலும் சேதமாக்கி வருகின்றன. வேப்பனப்பள்ளி, மகாராஜகடை, மேகலசின்னம்பள்ளி ஆகிய பகுதியில் ராகி, நிலக் கடலை மற்றும் சிறுதானிய பயிர்களை விவசாயிகள் அதிகம் சாகுபடி செய்துள்ளனர். தற்போது இந்த பயிர்கள் அனைத்தும் அறுவடை செய்யும் பருவத்தில் உள்ளது. அறுவடை செய்யும் நேரத்தில் காட்டு பன்றிகள் விளை நிலங்களுக்குள் புகுந்து நாசம் செய்து வருவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.
இது குறித்து போத்திநாயனப்பள்ளி விவசாயி காளியப்பன் கூறியது: பன்றிகள், குரங்குகள் விளைநிலங்களில் புகுந்து நாசம் செய்வது பல ஆண்டுகளாக தொடர்கிறது. வனத்துறையினர், விலங்குகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்காமல் உள்ளனர். பயிர்களை பாதுகாக்க விவசாயிகள், விளைநிலங்களுக்குள் புகுந்து வரும் பன்றிகளை கொன்றால் வனத்துறையினர் நடவடிக்கை எடுக்கின்றனர். நடப்பாண்டு ஒரளவு மழை பெய்ததால் மகாராஜகடை மற்றும் எம்.சி., பள்ளி சுற்றுவட்டார பகுதியில் அதிக அளவில் நிலக்கடலை சாகுபடி செய்துள்ளோம். பயிர்களில் புகுந்து வரும் பன்றிகளை விவசாயிகளால் தன்னிச்சையாக விரட்டியடிக்க முடியவில்லை. அதனால், பயிர்களை பன்றிகள் நாசம் செய்வதை வேடிக்கை மட்டும் தான் பார்க்க முடிகிறது. கண் எதிரே பல ஆயிரம் ரூபாய் செலவழித்து சாகுபடி செய்த பயிர்கள் நாசமடையும் காட்சிகளை பார்க்க முடியவில்லை. தானிய பயிர்கள் விதைக்கப்பட்ட நிலங்களில் பழைய துணிகளை கம்புகளில் கட்டியும், மனித உருவம் அமைப்பு கொண்ட பொம்மைகளை பயிர்களுக்கு நடுவில் நட்டும் வன விலங்குகளிடம் இருந்து பயிர்களை காப்பாற்ற எங்களால் முடிந்த முயற்சிகளை செய்கிறோம்.
வனத்துறை சார்பில் நாரலப்பள்ளி காப்புக்காட்டில் 3 கிலோ மீட்டர் தூரத்துக்கு சோலார் மின் வேலி அமைக்கப்படும் என்று அறிவித்தும், அதற்கான பணிகள் இன்னும் துவங்கப்படாமல் உள்ளது. சோலார் மின்வேலி அமைத்தால். விவசாய நிலங்களில் பன்றிகள் நுழைவதை ஒரளவு கட்டுப்படுத்த முடியும். வனத்துறையினர் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து பன்றிகள் பாதிப்பு உள்ள பகுதியில் சோலார் மின் வேலியை அமைத்து தரவேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**கி.கிரி., வேளாண் முன்னோடி திட்டம்கர்நாடகா அரசு அலுவலர்கள் ஆய்வு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 24,2010,03:08 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் பயிர் மதிப்பீட்டாய்வு முன்னோடி வேளாண்மை திட்டத்தை கர்நாடக மாநில அலுவலர்கள் குழு ஆய்வு செய்தனர்.கர்நாடகா மாநில புள்ளியல் துறை இணை இயக்குனர் நாராயணசாமி, துணை இயக்குனர் முனிராஜ், உதவி புள்ளி இயல் அலுவலர் பிரபாகரன்,வேளாண்மை இணை இயக்குனர் கொன்னூர்,வேளாண் அலுவலர் தனஞ்செயன், தோட்டக்கலை துறை துணை இயக்குனர் நாகராஜ் ஆகியோர் கொண்ட குழுவினர் ஆய்வில் கலந்து கொண்டனர்.சேலம் மண்டல புள்ளியியல் துறை துணை இயக்குனர் கமலக்கண்ணன், தமிழகத்தில் செயல்படும் பயிர் மதிப்பீட்டு ஆய்வு, தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தில் செயல்படுத்தப்படும் பயிர் பரப்பு, உற்பத்தி, சராசரி விளைச்சல் உள்ளிட்ட புள்ளி விவரங்கள் கர்நாடகா மாநில அலுவலர்களுக்கு விளக்கி கூறினார்.செம்மை நெல் சாகுபடி மூலமாக அதிக விளைச்சல் பெறுவதையும், தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தின் கீழ் நஷ்ட ஈடு வழங்குவதையும், தோட்டக்கலை துறை சம்மந்தம்மான திட்ட விவரங்களையும் வேளாண்மை இணை இயக்குனர் ராஜன், தோட்டக்கலை உதவி இயக்குனர் ஜோசப் ஆகியோர் விளக்கி கூறினர்.ஆர்.டி.ஓ.,வின் நேர்முக உதவியாளர் லட்சுமிநாராயணன், மாதந்தோறும் பிர்கா அளவில், வட்ட அளவில், மாவட்ட அளவில் பயிர் சாகுபடி விவரங்கள் சம்மந்தமான கூட்டம் நடப்பதையும், அடங்கல் மற்றும் இதர கிராம பதிவேடுகள் பராமரிக்கப்படுவதையும் விளக்கி கூறினார்.அப்போது, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புள்ளியில் துறை, வேளாண்மை துறை, தோட்டக்கலை துறை, வருவாய் துறை ஆகியோர் இணைந்து செயல்படுவதையும், விளைச்சல் விவரங்கள், புள்ளியல் துறையில் மத்திய மாநில அரசின் நெறிமுறை வழிகாட்டுதலின் படி மிக துல்லியமாக கணக்கிடப்படுவதையும் கர்நாடகா மாநில அலுவலர்கள் பாராட்டினர்.

**அதிக மகசூல் எடுக்க மேலுரம்: வேளாண் அதிகாரி யோசனை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 24,2010,03:05 IST

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடப்பு காரீப் பருவ பயிர்களுக்கு விவசாயிகள் குருணை வடிவ யூரியா மேலுரமாக போட்டால், அதிக மகசூல் கிடைக்கும்' என, வேளான் இணை இயக்குனர் ராஜன் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:கிருஷ்ணகிரி மாவட்டத்தில் காரீப் பருவத்தில் மானாவாரி பயிர்கள் விதைக்கப்பட்டு தற்போது மேலுரம் இடும் நிலையில் உள்ளது. சம்பா நெல் சாகுபடியிலும் நடவு செய்யப்பட்டு முதல் மேலுரம் இடும் நிலையில் உள்ளது. அனைத்து பயிர்களுக்கும் யூரியா மற்றும் பொட்டாஷ் ஆகிய உரங்கள்

மேலுரமாக இட பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேலுரங்களில் தழைச்சத்து உரத்தினை ஈடு செய்ய யூரியா தற்போது குருணை வடிவத்திலும் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. குருணை வடிவ யூரியாவை பயிர்களுக்கு இடும் போது பயிர்கள் பச்சை பிடிப்பது சிறிது தாமதம் ஆவதால், பல விவசாயிகள் சாதாரண யூரியவை அதிக அளவில் இட விரும்புகின்றனர். ஆனால், குருணை வடிவ யூரியாவில் தான் அதிக பலன்கள் உள்ளது.பொதுவாக இரு வகையான யூரியாவிலும் 46 சதம் தழைச்சத்து உள்ளது. குருணை வடிவ யூரியாவில் தழைச்சத்து நீண்ட நாளுக்கு பயிர்களுக்கு கிடைப்பதால் பயிர்கள் பசுமை மாறாமல் இருக்கும். சாதாரண யூரியாவை பயிர்களுக்கு இடும்போது உடனடியாக கரைவதாலும், அதில் உள்ள தழைச்சத்து நீரின் மூலமாக ஆவியாவதாலும், பயிர்கள் பச்சை தன்மையை இழக்கிறது. குருணை வடிவ யூரியாவை இடும்போது, அதில் உள்ள தழைச்சத்து வீணாகாமல் பயிர்களுக்கு நேரடியாக கிடைக்கிறது.குருணை வடிவ யூரியா கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உரக்கடைகளிலும் தற்போது விநியோகம் செய்யப்படுகிறது. விவசாயிகள் குருணை வடிவ யூரியாவை பயிர்களுக்கு இட்டு அதிக அளவில் விளைச்சல் பெற கேட்டு கொள்கிறோம்.

**மழையால் மாவுப்பூச்சி அழிவு; தப்பியது மரவள்ளிக்கிழங்கு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 24,2010,03:20 IST

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் பரவலாக பெய்யும் மழையால் மாவுப் பூச்சி தாக்குதல் குறைந்து, மரவள்ளிக்கிழங்கு பயிர் தப்பியுள்ளது.

தமிழகத்தில் ஏழு லட்சம் ஏக்கருக்கு மேல் மரவள்ளிக்கிழங்கு பயிரிடப்பட்டுள்ளது. இந்தியாவில் 55 சதவீதம் மரவள்ளிக்கிழங்கு தமிழகத்தில் பயிராகிறது. கேரளாவில் 35 சதவீதம் பயிராகிறது. தமிழகத்தில் 800க்கும் மேற்பட்ட ஜவ்வரிசி ஆலைகள் உள்ளன. எல்லா மாவட்டத்திலும் மரவள்ளிக்கிழங்கு சாகுபடி நடக்கிறது. குறிப்பாக ஈரோடு, சேலம் மாவட்டத்தில் மரவள்ளிக்கிழங்கு சாகுபடி பரப்பு அதிகரித்து வருகிறது.

பெருந்துறை பகுதி விவசாயிகள் கூறியதாவது:வறட்சியை தாங்கி வளரக்கூடிய பயிர் மரவள்ளிக்கிழங்கு. மானாவாரி, இறவையிலும் பயிரிடப்படுகிறது. மரவள்ளியின் வேர்தான் கிழங்குகளாகின்றன. செம்மண் கலந்த மணற்பாங்கான இடத்தில் அதிகம் விளைகிறது. நீர் அதிகளவு தேங்கினால் மரவள்ளிக்கிழங்கு அழுகிவிடும். தென் மேற்கு பருவ மழையை பொறுத்து மே, ஜூன், ஜூலை மாதத்தில் மானாவாரியில் மரவள்ளிக்கிழங்கு நடவு செய்யப்படுகிறது.கோ-1, கோ-2, கோ-3, முள்ளுவாடி-1 ரகம் ஆகியவை மரவள்ளி ஆராய்ச்சி பண்ணையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. திருவனந்தபுரம் மத்திய கிழங்கு ஆராய்ச்சி நிறுவனம் ஹெச்-97,

ஹெச்-165, ஹெச்-226, ஸ்ரீசாகியா, விசாகம், பிரகாஷ் போன்ற கலப்பின ரகங்களும் உள்ளன. பொதுவாக தமிழகத்தில் கோ-1, எச்-226 ரகங்கள்தான் அதிகளவு பயிரிடப்படுகின்றன.இவ்வாறு அவர்கள் கூறினர்.

கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் நல்லசாமி கூறியதாவது: மரவள்ளிக்கிழங்கு பயிரிடும் போது, ஊடு பயிராக எள், நிலக்கடலை, உளுந்து, பாசிபயறு போன்றவைகளை பயிரிடலாம். வெள்ளோடு, சென்னிமலை, வாய்க்கால்மேடு, சின்னியம்பாளையம், அறச்சலூர், அவல் பூந்துறை,  உள்பட பல இடங்களில் மரவள்ளி பயிராகியுள்ளது. சென்றாண்டை விட ஈரோடு மாவட்டத்தில் அதிக பரப்பளவில் மரவள்ளிக்கிழங்கை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். மரவள்ளிக்கிழங்கு விலை மூன்று மாதமாக அதிகரித்து வருகிறது.ஒரு வாரமாக மழை பெய்து வருவதால், மாவுப் பூச்சிகளின் தாக்குதல் குறைந்து விட்டது. இதனால், மரவள்ளிக்கிழங்கு பயிரும் தப்பியுள்ளது. கிழங்குக்கு நல்ல விலை கிடைத்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.இவ்வாறு அவர் கூறினார்.

**இனி தேங்காய் விலை உயர வாய்ப்பு வேளாண் துணை இயக்குனர் தகவல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2010,04:02 IST

ஈரோடு: "வரும் காலங்களில் தேங்காய் விலை உயர வாய்ப்புள்ளதால் விவசாயிகள் திட்டமிட்டு தேய்காய் அறுவடை செய்ய வேண்டும்,' என வேளாண்மை துணை இயக்குனர் பரமசிவம் தெரிவித்துள்ளார்.

அவர் கூறியுள்ளதாவது:உலகின் 93 நாடுகளில் வளரும் தென்னையின் மொத்த உற்பத்தி ஆண்டுக்கு 57.94 பில்லியன் காய்கள். இந்தியா, பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகள் மொத்தம் உற்பத்தியில் நான்கில் மூன்று பங்கு வகிக்கின்றன. 48 சதவீதம் சமையலில் நேரடி நுகர்வுக்கும், 35 சதவீதம் தேங்காய் எண்ணெய்க்காகவும்,11 சதவீதம் இளநீருக்காகவும் மீதமுள்ள ஆறு சதவீதம் பல்வேறு வகை சமூக மற்றும் கலாச்சார பயன்பாடுகளுக்காக பயன்படுகிறது.

ஆசிய பசிபிக் தேங்காய் குழுமத்தின் கணக்கீட்டின்படி உற்பத்தி திறனில் இந்தியா ஹெக்டேருக்கு 8,165 தேங்காய் உற்பத்தியாகி முதலிடத்தை பெற்றுள்ளது. மொத்த தேங்காய் உற்பத்தியில் 20 சதவீத பங்கு வகிக்கிறது. இந்திய பொருளாதாரத்தில் 7,000 கோடி ரூபாய் அளவுக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியையும், 250 கோடி ரூபாய் அளவுக்கு அந்நிய செலாவணியையும் ஈட்டித் தருகிறது.

இந்திய அளவில் கேரளாவில் 0.87 மில்லியன் ஹெக்டேர் பரப்பிலும், கர்நாடகாவில் 0.40 மில்லியன் ஹெக்டேர் பரப்பிலும், தமிழகத்தில் 0.37 மில்லியன் ஹெக்டேர் பரப்பிலும் தென்னை பயிரிடப்படுகிறது. தென்னை சாகுபடி பரப்பு தமிழகத்தில் குறைவாக உள்ள போதிலும் உற்பத்தி திறன் (ஒரு ஹெக்டேருக்கு 14 ஆயிரத்து 495 தேங்காய்) காரணமாக, இந்திய அளவில் தேங்காய் உற்பத்தியில் 34 சதவீதம் தமிழகம் கொண்டுள்ளது. கோவை, தஞ்சாவூர், திண்டுக்கல், கன்னியாகுமரி, வேலூர், ஈரோடு, தேனி, நெல்லை, கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் 80 சதவீதம் பங்கு அளிக்கிறது.

எதிர் வரும் காலங்களில் தேங்காய் விலை உயருமா? என்பது குறித்து, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் பொள்ளாச்சி சந்தையில் பத்து ஆண்டுகளாக நிலவிய விலையை ஆய்வு செய்தது. ஆய்வின் படி இந்தியா 6.6 லட்சம் கொப்பரையையும், 4.3 லட்சம் டன் தேங்காய் எண்ணெயையும் உற்பத்தி செய்யும் என்று கணக்கீடு செய்துள்ளது. சென்றாண்டை விட 1.5 சதவீத அளவு இது அதிகமாக இருக்கும்.தரம் மற்றும் எண்ணெய் பிழிதிறன் அதிகமாக உள்ளதால் பொள்ளாச்சி பகுதியில் விளையும் தேங்காய் அதிக விலை பெறுகிறது. தேங்காயில் இருந்து 17 சதவீத அளவு கொப்பரை, கொப்பரையில் இருந்து 60 சதவீதம் எண்ணெய் கிடைக்கிறது.

வர்த்தக மூலங்களின் படி ஃபிப்ரவரி முதல் ஜூன் வரை தேங்காய் வரத்து அதிகமாகவும், ஜூலை முதல் டிசம்பர் வரை வரத்து குறைவாகவும் இருக்கும். உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையத்தின் ஆய்வு முடிவுகளின் படி தேங்காய் விலை ஜூலை மாத்ததுக்கு பிறகு அதிகரிக்க துவங்கும். எதிர்வரும் பண்டிகை காலத் தேவைக்கு பீஹார், உத்திரபிரதேசம், ஆந்திரா, கேரளா போன்ற மாநிலங்களில் உள்ள வர்த்தகர்கள் அதிகளவு கொள்முதல் செய்வர்.

ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் 5 முதல் 5.50 ரூபாயாகவும், அக்டோபர்- நவம்பர் மாதங்களில் 5.5 ரூபாய் முதல் 6 ரூபாயாகவும் இருக்கும் என ஆய்வு முடிவு தெரிவிக்கிறது. தமிழகத்தில் இதர சந்தைகளில் விலை சற்று குறைவாகவே இருக்கும். விவசாயிகள் விலையை கருத்தில் கொண்டு தேங்காய் அறுவடையை திட்டமிட வேண்டும்.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**சொட்டுநீர் பாசனம் விவசாயிகள் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 24,2010,02:22 IST

பொள்ளாச்சி: சொட்டு நீர் பாசனத்தில் மாநில அரசின் பங்களிப்பு மானியத்தையும் சேர்த்து நூறு சதவீதம் மானியம் கொடுத்து விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும் என்று வேளாண்மை துறை அமைச்சருக்கு கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

பரம்பிக்குளம் ஆழியாறு பாசன திட்டம் திருமூர்த்தி நீர்த்தேக்க திட்டக்குழு தலைவர் பரமசிவம்,

வேளாண்மை துறை அமைச்சருக்கு அனுப்பிய மனு:
வேளாண் துறை சார்பில் தென்னை மரத்திற்கு வேப்பம் புண்ணாக்கு இலவசமாக வழங்க வேண்டும். மேலும், இடுபொருட்கள், நுண்ணூட்ட சத்துகள், வேளாண் பல்கலையால் தயாரிக்கப்படும் தென்னை டானிக் மற்றும் வேப்பம்புண்ணாக்கு ஆகியவற்றை முழு மானியத்தில் வழங்க வேண்டும்.
பாசனத்திற்கு கிடைக்கும் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி, அதிக மகசூல் எடுக்க தென்னைக்கு சொட்டு நீர் பாசனத்தை விவசாயிகள் அமைத்துள்ளோம். அனைத்து வகை பயிர்களுக்கும் சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் பாசன முறை கையாளப்படுகிறது.
சொட்டு நீர் பாசனம் அமைக்க அதிக செலவு ஏற்படுவதால் மத்திய அரசு 50 சதவீதம் மானியம் வழங்குகிறது. மானியம் போதுமானதாக இல்லாததால் அனைத்து விவசாயிகளும் சொட்டு நீர் பாசனம் அமைக்க முடியாமல் அவதிப்படுகின்றனர். மற்ற மாநிலங்களில் மாநில அரசும் மானியம் கொடுத்து சொட்டு நீர் பாசனத்தை ஊக்குவிக்கிறது.
அதேபோன்று தமிழக அரசும் சொட்டுநீர் மற்றும் தெளிப்பு நீர் பாசனத்திற்கு 50 சதவீதம் மானியம் அறிவித்து, விவசாயிகளுக்கு 100 சதவீத மானியம் கிடைக்க செய்ய வேண்டும். கோவை, திருப்பூர் மாவட்டத்தில் பி.ஏ.பி., பாசனம் இல்லாத காலத்தில் கிணற்று பாசனத்தை நம்பியே விவசாயிகள் உள்ளனர்.
சொட்டு நீர் உபகரணத்தில் உப்பு படிந்து விடுவதால் பாசனம் செய்ய முடிவதில்லை. அதனால், சொட்டு நீர் பாசனத்தில் "டிரிப்பர்'க்கு பதிலாக "டேப்' முறையை கையாள அனுமதி வழங்க வேண்டும். இவ்வாறு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கொப்பரை உற்பத்தி நாட்கள் அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 24,2010,00:46 IST

பல்லடம்: பல்லடம், சுல்தான்பேட்டையில் அடித்து வரும் குளிர்ந்த காற்று காரணமாக கொப்பரை உற்பத்தி நாள், ஐந்து நாளில் இருந்து எட்டு நாட்களாக உயர்ந்துள்ளது. பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரங்களில் கொப்பரை உற்பத்தி தொழில் முக்கிய தொழிலாக திகழ்கிறது. இங்கு, 150க்கும் மேற்பட்ட கொப்பரை உற்பத்தி களங்கள் உள்ளன. இவைகளில் உற்பத்தியாகும் கொப்பரை, பல்லடம் மற்றும் செஞ்சேரியில் உள்ள அரசு கொப்பரை கொள்முதல் நிலையங்கள் மற்றும் காங்கயம், வெள்ளக்கோவில் வெளிமார்க்கெட்டுகளில் விற்கப்படுகின்றன.
அரசு கொள்முதல் மையத்தில் ஒரு கிலோ கொப்பரை 44.50 ரூபாய்க்கும், வெளிமார்க்கெட்டில் 37 ரூபாய்க்கும் தற்போது கொள்முதல் செய்யப்படுகிறது. அரசு கொள்முதல் மையத்தில் விவசாயிகளிடம் இருந்து கொப்பரை கொள்முதல் செய்யும்போது, அதிக அளவு தரம் பிரித்து கழிக்கப்படுகிறது.கொள்முதல் செய்யப்படும் கொப்பரைக்கு பணம் பட்டுவாடா இரண்டு வாரத்துக்கு மேல் இழுத்தடிப்பு செய்யப்படுகிறது. இதனால், பெரும்பாலான விவசாயிகள்

குறைவான கொள்முதல் விலை என்றாலும்,  உடனடியாக பணம் கிடைக்கும் என்பதால், வெளிமார்க்கெட்டில் தங்களின் கொப்பரைகளை விற்பனை செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

பல்லடம், சுல்தான்பேட்டையில் கடந்த 10 நாட்களாக வெயிலின் தாக்கம் குறைந்து, குளிர்ந்த காற்று வீசி வருகிறது. இதன்காரணமாக கொப்பரை உற்பத்திக்கு தேவையான வெப்பம் மிகவும் குறைந்துள்ளது. வழக்கமாக கொப்பரை உற்பத்தி களத்தில் ஐந்து நாளில் உற்பத்தியாகும் கொப்பரை, தற்போது மூன்று நாட்கள் அதிகரித்துள்ளன. உற்பத்தி நாட்கள் அதிகரித்துள்ளதால், உற்பத்தி செலவும் விவசாயிகளுக்கு அதிகரித்துள்ளது.

**பஞ்சப்பட்டியில் ஆடிப்பட்ட சாகுபடி பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 24,2010,02:13 IST

கரூர்: கிருஷ்ணராயபுரம் அருகேவுள்ள பஞ்சப்பட்டியில் தோட்டக்கலைத்துறை சார்பில் ஆடிப்பட்ட சாகுபடி குறித்த பயிற்சி முகாம் நடந்தது.முகாமை துவக்கி வைத்து ஆடிப்பட்டத்தில் சாகுபடி செய்யப்படும் காய்கறி பயிர்களின் சாகுபடி முறை குறித்தும், உற்பத்தியை அதிகரிக்கும் தொழில்நுட்பம் குறித்தும், தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜேந்திரன் விளக்கிப் பேசினார்.கிருஷ்ணராயபுரம் தோட்டக்கலை அலுவலர் கலா பேசியதாவது:தோட்டக்கலைத்துறை மூலம் மத்திய, மாநில அரசுத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் காய்கறி விதைகள், பழச்செடிகள் 50 சதவீதம் மானிய விலையில் வழங்கப்படுகிறது. சொட்டுநீர் பாசனம் அமைக்க அரசு ஒரு ஹெக்டருக்கு அதிகப்பட்சமாக 37 ஆயிரத்து 440 ரூபாய் வழங்குகிறது.உயர் தொழில்நுட்ப உற்பத்தி திட்டத்தின் கீழ் சப்போட்டா, மல்லிகை, கனகாம்பரம், செண்டுமல்லி போன்ற மலர்கள் மற்றும் மஞ்சள், வெற்றிலை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானிய விலையில் இடுபொருட்கள் வழங்கப்படுகிறது.

தற்போது ஒருங்கிணைந்த தோட்டக்கலைத் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வீரிய ரக வெண்டை விதைகள், தக்காளி, மிளகாய் விதைகள் 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படுகிறது.

50 சத மானிய விலையில் பழக்கன்று விநியோகம் செய்யப்படுகிறது. விதைகள் மற்றும் பழக்கன்றுகள் தேவைப்படும் விவசாயிகள் கிருஷ்ணராயபுரம் தோட்டக்கலைத்துறை அலுவலர்களை அணுகி பயன்படுத்திக் கொள்ளலாம்.இவ்வாறு அவர் பேசினார்.கிருஷ்ணராயபுரம் தோட்டக்கலை உதவி அலுவலர் நசீர் பேசுகையில்,""விவசாயிகள் தரமான காய்கறிகளை உற்பத்தி செய்து உழவர் சந்தை மூலம் விற்பனை செய்ய தோட்டக்கலைத்துறை மூலம் உழவர் சந்தை அடையாள அட்டை வழங்கப்படுகிறது. இந்த அட்டைகளை பயன்படுத்தி இடைத்தரகர்கள் இல்லாமல் தாங்கள் உற்பத்தி செய்த காய்கறிகளை

உழவர் சந்தையில் அதிக விலைக்கு விற்று பயனடையலாம்" என்றார். ஏற்பாடுகளை தோட்டக்கலைத்துறை உதவி வேளாண்மை அலுவலர் நசீர், மலர்கொடி செய்திருந்தனர்..

**கூடுதல் மகசூலுக்கு சொட்டு நீர் பாசனம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2010,04:44 IST

லாலாப்பேட்டை: குறைந்த தண்ணீரில் கூடுதல் மகசூல் செய்ய சொட்டுநீர் பாசனம் பயன்படுத்த கிருஷ்ணராயபுரம் தோட்டக்கலை உதவி இயக்குநர் ராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

அறிக்கையில் உள்ளதாவது: கிருஷ்ணராயபுரம் பகுதியில் தற்பொழுது சாகுபடி செய்யும் பரப்பளவு குறைந்து வருகிறது. இதனால், இருக்கும் நிலத்தையும், நீரையும் கொண்டு கூடுதல் உற்பத்தி செய்ய வேண்டியுள்ளது. அதற்காக விவசாயிகள் சிக்கனமாக பயன்படுத்த வசதியாக சொட்டுநீர் பாசனம் அமைக்க 65 சதவீதம் மானியம் அரசு வழங்குகிறது.

தோட்டகலைத்துறை மூலம் காய்கறி பயிர், மலர், பழமரம், முலிகை பயிர்கள், மரவள்ளி, கரும்பு, தென்னை ஆகியவற்றுக்கு சொட்டு நீர் பாசனம் மூலம் சிக்கனமாக தணணீர் பயன்படுத்தி, மகசூல் அதிகரிக்க முடியும். அதிகப்படியான செலவு மற்றும் பயிருக்கு தேவையான உரம் தேவையை கட்டுப்படுத்த முடியும். விவசாயிகள் தங்கள் நிலத்தில் சொட்டுநீர் பாசனம் அமைக்க அரசு வழங்கும் மானியம் 65 சதவீதம் பெறுவதற்கு, நிலத்தின் சிட்டா, பட்டா, அடங்கல், ஃபோட்டோ மற்றும் ரேஷன் கார்டு ஆவணங்கள் தேவைப்படும். ஆவணங்களை காண்பித்து தோட்டக்கலைதுறை மூலம் விவசாயிகள் பயன் அடைய வேண்டும்.

**விவசாயிகளுக்கு விழிப்புணர்வு பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2010,04:39 IST

கும்பகோணம்: மத்திய அரசின் சேமிப்பு கிடங்கு நிறுவனம் சார்பில் விவசாயிகளுக்கு இரண்டு நாள் பயிற்சி முகாம் ஆடுதுறையில் துவங்கியது.கும்பகோணம் அருகே ஆடுதுறையில் உள்ள தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையத்தில் நேற்று காலை மத்திய சேமிப்பு கிடங்கு நிறுவனம் சார்பில் விவசாயிகளுக்கு இரண்டு நாள் விழிப்புணர்வு பயிற்சி முகாம் துவக்க விழா நடந்தது.தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் தலைமை வகித்தார். கும்பகோணம் ஆர்.டி.ஓ., அசோக்குமார் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து பேசியதாவது:மக்களுக்கு வாழ்வாதாரம், சமூக பாதுகாப்பு உள்பட நல்ல நிலையில் இருப்பதற்கு அரசே வழி வகுத்து பல்வேறு வழிகளில் செயல்படுகிறது.விவசாயிகளுக்கு நல்ல விளைச்சல் கிடைக்க வீரியமிக்க விதைகள் வேண்டும். அரசாங்கமே விதைப்பண்ணை மூலம் பல்வேறு வீரியமிக்க ரகங்களை

கண்டுபிடித்து வழங்குகிறது.விவசாயிகள் ஒரு புறம் என்றால், மற்றொரு புறம் விவசாய தொழிலாளர்கள். 2006ம் ஆண்டில் இவர்களுக்கு அரசாங்கம் சமூக பாதுகாப்பு நலத்திட்டம் கொண்டு வந்து பல்வேறு வகைகளில் உதவி புரிகிறது. இத்திட்டத்தில் ஒன்றே முக்கால் கோடி பேர் சேர்க்கப்பட்டுள்ளனர்.இவர்களது வீட்டில் திருமணம், மகப்பேறு, இறப்பு, விபத்து எதுவாயினும் பயன்பெறக்கூடிய வழிமுறை உள்ள திட்டம். விவசாயிகள் அறுவடை காலங்களில் சேமித்து வைக்க வழியில்லாமல் வியாபாரிகளிடம் அவர்கள் கூறும் விலைக்கு கொடுத்து விடுகின்றனர்.

விளை பொருட்கள் நல்ல விலைக்கு விற்க சேமிப்புக்கிடங்கில் சேமித்து வைக்கும் நல்ல வாய்ப்பை அரசு ஏற்படுத்துகிறது. கும்பகோணம் மற்றும் தஞ்சாவூரில் சேமிப்பு கிடங்கு வரும் வாய்ப்பு உள்ளது. இதனால், இழப்பீடு தவிர்த்தல், தர நிர்ணயம், முறையான சந்தை விலை உள்ளிட்ட பல்வேறு பயன்கள் விவசாயிகளுக்கு கிடைக்கும்.இவ்வாறு அவர் பேசினார்.தொடர்ந்து, சென்னை மண்டல அலுவலக சேமிப்பு மற்றும் ஆய்வு அதிகாரி கருணாகரன் பேசுகையில், ""தமிழகத்தில் ஆண்டு தோறும் எட்டு இடங்கள் என்று மத்திய அரசின் சேமிப்புக்கிடங்கு வளர்ச்சி மற்றும் ஒழுங்குபடுத்துதல் சட்டம் 2007 பற்றி விழிப்புணர்வு பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு 8 ஊர்களில் முகாம்கள் நடத்தப்பட்டன. இந்த ஆண்டு முதல் இடமாக ஆடுதுறையில் நடத்தப்படுகிறது. இந்த புதிய சட்டம் மூலம் கிராமப்புறங்களில் நிதி வரம்பு உயர்த்துதல், விஞ்ஞான முறையில் பொருட்களை சேமிப்பதன் மூலம் பயனடைதல், தரம்பிரித்தல் மற்றும் தரத்திற்கும் உயர்ந்த அளவு சன்மானம், சிறப்பான விலைக்கிரய நிர்வாகம், விவசாயிகளுக்கு அதிக வருமானம் மற்றும் நுகர்வோருக்கு மேம்பாடான சேவைகள் என பலன் தரக்கூடியது,'' என்றார்.முன்னதாக, கிடங்கு மேலாளர் சுபாஷ் வரவேற்றார்.சீதாராமன் நன்றி கூறினார்.

**கம்பம் பள்ளத்தாக்கில் திராட்சையில் ரூ.600 கோடி லாபம் ஈட்டும் வாய்ப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 21,2010,23:12 IST

தேனி : திராட்சை சாகுபடி மூலம் கம்பம் பள்ளத்தாக்கில் 600 கோடி ரூபாய் அந்நிய செலவாணி ஈட்ட முடியும் என செயல்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.
தமிழகத்தில் திராட்சை அதிகளவில் சாகுபடியாகும் மாவட்டம் தேனி மாவட்டம். இங்கு 2,600 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதில் 2000 ஹெக்டேரில் "மஸ்கட்" எனப்படும் விதையுள்ள வகையும், 600 ஹெக்டேரில் "தாம்சன்' எனப்படும் விதையில்லா ரகமும் பயிராகிறது. ஆண்டின் அனைத்து பருவங்களிலும் பயிரிட ஏற்ற நீர்வளம், நிலவளம், தட்ப வெப்பநிலை கொண்டதாக கம்பம் பள்ளத்தாக்கு உள்ளது. அதனால்தான் ஆண்டுக்கு மூன்று முறை திராட்சை

பயிரிடப்பட்டு அறுவடை நடக்கிறது. இது உலகின் வேறெந்த திராட்சை விளையும் பகுதியிலும் இல்லாத சிறப்பாகும்.

திராட்சை விளைச்சலில் உலக சராசரி மகசூல் ஹெக்டேருக்கு ஒன்பது டன் என்ற அளவிலும், இந்திய சராசரி மகசூல் 25 டன்னாகவும் உள்ளது. ஆனால் கம்பம் பள்ளத்தாக்கின் சராசரி மகசூல் ஹெக்டேருக்கு 30 டன்னுக்கும் அதிகமாக உள்ளது. இருப்பினும் இப்பழங்கள் வெளி நாட்டு ஏற்றுமதிக்கோ, ஒயின் உற்பத்திக்கோ ஏற்றதாக இல்லை.

100 ஆண்டுகளுக்கு முந்தைய பழைய ரகங்களையே பயன்படுத்துகின்றனர். தரமான ரகங்கள் இல்லாததும், முறையற்ற வணிக சூழ்நிலை, இடைத்தரகர்களின் தலையீடு போன்றவற்றால் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைப்பதில்லை. திராட்சை சாகுபடியில் ஒன்றரை லட்சம் பண்ணை தொழிலாளர்கள் நேரடியாகவும், திராட்சை வியாபாரம், பழரச தயாரிப்பில் ஒரு லட்சம் பேர் மறைமுகமாகவும் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தியும், வெளிநாட்டு ஏற்றுமதிக்கு உகந்த ரகங்களை விளைவித்து ஏற்றுமதி செய்வதன் மூலம் இப்பகுதி விவசாயிகள் 600 கோடி ரூபாய் அந்நிய செலவாணியை ஈட்ட முடியும் என திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்காக இப்பகுதியில் சுமார் 20 ஏக்கர் பரப்பளவில் நான்கு கோடி செலவில் திராட்சை சாகுபடி ஆராய்ச்சி மையம் அமைக்கவும், திராட்சை சாகுபடி அனைத்து பங்கீட்டாளர்களின் ஒருங்கிணைந்த முன்னேற்றத்திற்கான செயல்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

**ஏலச்செடியில் அழுகல் நோய் விளைச்சல் பாதிக்கும் அபாயம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 23,2010,22:54 IST

கம்பம் : ஏலச்செடியில் அழுகல் நோய் தாக்குதல் அதிகரித்து வருகிறது. இதனால் ஏலக்காய் சாகுபடியில் பாதிப்பு ஏற்படும் அபாயம் உருவாகி உள்ளது.  கேரளாவில் தற்போததய ஏலக்காய் சீசனில் காய் வரத்து திருப்திகரமாக இல்லை. சில வாரங்களாக நல்ல மழை பெய்து வருகிறது. இதனால் ஏலச்செடிகளில் வேர் அழுகல், காய் அழுகல், சரம் அழுகல் நோய் ஏற்பட்டு, தட்டை ஒடிந்து விழுகிறது. கணவாய்க் குழி, கல்தொட்டி, மாதவன்கானல், மாலி, இஞ்சிப்பிடிப்பு, சுல்தானியா மற்றும் நெடுங்கண்டம் பகுதிகளில் அழுகல் அதிக அளவில் காணப்படுகிறது.

ஏலச்செடிகளில் காணப்படும் அழுகலை தடுப்பது குறித்து கே.சி.பி.எம்.சி., ஆக்ஷன் கம்பெனி மண்டல மேனேஜர் அன்பழகன் கூறியதாவது: ஏலச்செடிகளில் அழுகலை தடுக்க 100 லிட்டர் தண்ணீருடன் காப்பர் சல்பேட் ஒரு கிலோ, சுண்ணாம்பு ஒரு கிலோ கலந்து தெளிக்க வேண்டும். 100 லிட்டர் தண்ணீருடன் சிஓசி 250 மில்லி கலந்து ஒரு ஏக்கருக்கு 1.5 கிலோ தெளிக்க வேண்டும். அக்ரோபெட் 100 கிராம், 100 லிட்டர் தண்ணீர் மற்றும் சிஓசி 200 மில்லி கலந்து

தெளிக்கலாம். அலியேட் 300 மிலி, 100 லிட்டர் தண்ணீருடன் கலந்து தெளிக்கலாம். வேர் அழுகலுக்கு பவிஸ்டின் 100 மில்லியும், டைத்தேன் 200 மில்லியும் கலந்து வேர்ப்பகுதியில் ஊற்ற வேண்டும். இந்த முறைகளை பின்பற்றி ஏலச்செடிகளில் உள்ள அழுகல் நோயை கட்டுப்படுத்தலாம் என்றார்.

**திராட்சை விவசாயிகள் பிரச்னை வியாபாரிகளிடம் பேச்சுவார்த்தை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 21,2010,23:08 IST

கம்பம் : மனு கணக்கில் திராட்சை கொள்முதல் செய்யக் கூடாது என்பதில் ஏற்பட்டுள்ள பிரச்னை பற்றி விவாதிக்க, விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் கலந்து கொண்ட ஆலோசனை கூட்டம் காமயகவுண்டன்பட்டியில் நடந்தது.
காமயகவுண்டன்பட்டியில் நடந்த திராட்சை சாகுபடி கருத்தரங்கில் மாவட்ட கலெக்டர் முத்துவீரனிடம், வியாபாரிகள் திராட்சை பழங்களை மனு கணக்கில் கொள்முதல் செய்வதால் இழப்பு ஏற்படுவதாக கூறி கிலோ கணக்கில் கொள்முதல் செய்ய விவசாயிகள் வலியுறுத்தினர். இதையடுத்து கலெக்டரும், வியாபாரிகள் மனு கணக்கில் வாங்கினால் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். ஆனால் வியாபாரிகள் கலெக்டரின் உத்தரவை ஏற்கவில்லை. மாறாக பழங்களை கொள்முதல் செய்யாமல் விவசாயிகளை மிரட்டும் செயல்களில் ஈடுபட்டனர்.
இந்த பிரச்னையை தீர்க்க உத்தமபாளையம் ஆர்.டி.ஓ., மோகனதாஸ் தலைமையில் காமயகவுண்டன்பட்டியில் ஆலோசனை கூட்டம் நடந்தது. திராட்சை சாகுபடியாளர்கள் சங்க தலைவர் மோகன்குமார், பொருளாளர் இருளாண்டி உள்ளிட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். வியாபாரிகள் சார்பிலும் அதன் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் பேசிய வியாபாரிகள், "கிலோ கணக்கில் திராட்சை கொள்முதல் செய்து கொள்கிறோம். ஆனால் பழம் எடுப்பதற்கு தொழிலாளர் பிரச்னை உள்ளது. எனவே 20 நாட்கள் கழித்து பேசிக் கொள்ளலாம்' என்றனர். வியாபாரிகளின் கோரிக்கையை ஏற்க மறுத்த ஆர்.டி.ஓ., மோகனதாஸ் "வரும் வியாழக்கிழமை மாலை மீண்டும் ஆலோசனை கூட்டம் நடைபெறும்' என்றார்.

**பெரியகுளம் தோட்டக்கலை பண்ணையில் கன்றுகள் தயார்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 23,2010,22:53 IST

தேனி : பெரியகுளம் தோட்டக் கலை பண்ணையில் 28, 603 கன்றுகள் விற்பனைக்கு தயாராக உள்ளன. பெரியகுளம் அரசு தோட்டக்கலை பண்ணையில் ஒரு கன்று 20 ரூபாய் விலையுள்ள மா மென் தண்டு ஒட்டுக்கன்று 2066ம், 30 ரூபாய் விலையுள்ள பி.கே.எம்.,1 என்ற சப்போட்டா ஒட்டுக்கன்று 1910ம் விற்பனைக்கு உள்ளன. 25 ரூபாய் விலையுள்ள பெருநெல்லி ஒட்டுக்கன்று

6000 ஆயிரமும், 12 ரூபாய் விலையுள்ள மாதுளை பதியன் 2847 கன்றுகளும், 5 ரூபாய் விலையுள்ள வேம்பு, இலவன், பப்பாளி, கறிவேப் பிலை கன்றுகள் 15 ஆயிரமும், 15 ரூபாய் விலையுள்ள தென்னை நெட்டை 780 கன்றுகளும் விற்பனைக்கு உள்ளன. தேவையான விவசாயிகள் தோட்டக் கலை பண்ணையினை அணுகி பெற்றுக் கொள்ளலாம்.

**நெல், மக்காச்சோளம் பயிரிடும் விவசாயிக்கு மானியம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 23,2010,23:28 IST

காளையார்கோவில் : காளையார்கோவிலில் நெல், மக்காச்சோளம் பயிரிடும் விவசாயிகளுக்கு விதை நெல், கருவிகள் மானியமாக வழங்க 11.5 லட்ச ரூபாயை, அரசு ஒதுக்கியுள்ளது. இப்பகுதியில் நீர், நிலவள திட்டத்தில் நெல், மக்காச்சோளம் பயிரிடுவதற்கான செயல்விளக்கும் அமைக்கப்படும். இதில் 60 எக்டேரில் செம்மை நெல் சாகுபடிக்கு 5.4 லட்சம்; 38 எக்டேரில் திருந்திய செம்மை நெல் சாகுபடிக்கு 2.3 லட்சம்; மக்காச்சோளம் சாகுபடிக்கு 40 ஆயிரம்; மண்புழு உரம் தயாரிக்க 60 ஆயிரம்; களையெடுக்கும் கருவிக்கு 1.8 லட்சம் என 11.5 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட் டுள்ளது. இதில், செயல்விளக்கம் அமைக்க விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதி உதவி விவசாய அலுவலரை தொடர்பு கொள்ளலாம் என, உதவி இயக்குனர் (பொறுப்பு) கண்ணன் தெரிவித்தார்.

***குளிர்பானங்கள் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு சர்க்கரை இறக்குமதிக்கு அனுமதி ஒரு கிலோ சர்க்கரை ரூ.28 ஆக குறைந்தது 5 வருடங்களுக்கு முன்பு உயர்ந்தது போல பூண்டு விலை மீண்டும் உயர்வு***

*சென்னை, ஆக.24–*
*குளிர்பானங்கள் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு சர்க்கரை இறக்குமதிக்கு மத்திய அரசு அனுமதி அளித்ததால் சர்க்கரை விலை ஒரு கிலோ ரூ.28 ஆக குறைந்தும், 5 வருடங்களுக்கு முன்பு உயர்ந்ததுபோல பூண்டு விலை மீண்டும் உயர்ந்தும் வருகிறது.*
*குளிர்பானம் தயாரிக்க...*
*குளிர்பானங்கள், குளோப்ஜாம், ரசகுலா, அல்வா போன்ற இனிப்பு பண்டங்கள் தயாரிப்பதில் சர்க்கரை முக்கிய பங்குவகிக்கிறது. இதனால் சர்க்கரையின் தேவை*

*ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. கடந்த ஆண்டு வரலாறு காணாத வகையில் சர்க்கரை ஒரு கிலோ ரூ.48 வரை உயர்ந்தது. இந்த விலை உயர்வை கட்டுப்படுத்த மத்திய அரசு பல்வேறு நடவடிக்கை எடுத்தது. முதல் கட்டமாக வெளிநாடுகளுக்கு சர்க்கரை ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடைவிதித்தது.*

*இந்த தடைவிதிப்பால் சர்க்கரை விலை ஓரளவு குறையத்தொடங்கியது. அடுத்த கட்டமாக குளிர்பானம் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு சுத்திகரிக்கப்படாத சர்க்கரையை இறக்குமதி செய்ய மத்திய அரசு அனுமதி வழங்கியது. இதுபோன்ற காரணங்களாலும், மத்திய அரசு அனைத்து மில்களுக்கும் இந்த மாதம் 17 லட்சம் டன் ஒதுக்கீடு செய்திருப்பதாலும், சர்க்கரை விலையில் மேலும், மேலும் சரிவு ஏற்பட்டு வருகிறது. கடந்த வாரம் ஒரு கிலோ சர்க்கரை ரூ.29-க்கு விற்பனையாது, தற்போது கிலோ ரூ.28 ஆக சரிந்துள்ளது.*

*ஒரு கிலோ பூண்டு ரூ.200*

*குஜராத் மாநிலத்தில் கடந்த 5 வருடங்களுக்கு முன்பு பூண்டு விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டது. இதனால் ஏற்பட்ட பற்றாக்குறையால் பூண்டு விலை எந்த ஆண்டும் இல்லாத வகையில் உயர்ந்தது. அதாவது மலைப்பூண்டு கிலோ ரூ.150 ஆகவும், முதல் ரக பெரிய பூண்டு கிலோ ரூ.100 ஆகவும், இரண்டாம் ரக பூண்டு கிலோ ரூ.80 ஆகவும் உயர்ந்தது. இதன்பின்பு வெளிநாடுகளுக்கு பூண்டு ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடைவிதித்தது.*

*இதனால் கடந்த ஆண்டு ஒரு கிலோ பூண்டு ரூ.30 முதல் ரூ.40 வரை விற்பனையானது குறிப்பிடத்தக்கதாகும். தற்போது மத்திய அரசு வெளிநாடுகளுக்கு பூண்டு ஏற்றுமதிக்கு அனுமதி அளித்துள்ளது. இதனால் இலங்கை, மலேசியா மற்றும் அரபு நாடுகளுக்கும் குஜராத்தில் இருந்து அதிக அளவில் பூண்டு ஏற்றுமதியாகி வருகிறது. பிரியாணி, பிரிஞ்சி தயாரிப்பதற்கு ஏராளமான பூண்டுகள் பயன்படுத்தப்பட்டு வருவதாலும் விலை உயர்ந்து வருகிறது என்று வியாபாரி ஒருவர் கூறினார்.*

*கடந்த வாரம் ஒரு கிலோ மலைப்பூண்டு ரூ.180-க்கு விற்பனையாது தற்போது ரூ.200 ஆகவும், முதல் ரக பெரிய பூண்டு ரூ.130-க்கு விற்பனையானது ரூ.150 ஆகவும், இரண்டாம் ரக பூண்டு கிலோ ரூ.100-க்கு விற்பனையானது ரூ.120 ஆகவும் உயர்ந்துள்ளது என்று அனைத்து மளிகை வியாபாரிகள் சங்க தலைவர் பிரணவ சொரூபன் தெரிவித்தார். பூண்டு விலை உயர்வை கட்டுப்படுத்த வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதை மத்திய அரசு தடைவிதிக்கவேண்டும் என்பது வியாபாரிகளின் எதிர்பார்ப்பாகும்.*

*வத்தல் விலை குறைவு*

*தமிழ்நாட்டில் பல்வேறு கோவில்களில் கூழ்உற்றும் நிகழ்ச்சிகள் நடைபெற்று வருவதாலும், இன்னும் 2 வாரத்தில் விநாயகர் சதுர்த்தி வர இருப்பதாலும் சில்லரை வியாபாரிகள் மூட்டை, மூட்டையாக வெல்லம் வாங்கி இருப்புவைக்கத்தொடங்கிவிட்டனர். இதனால் வெல்லம் விலை உயர்ந்து வருகிறது. வேலூர் வெல்லம் கடந்த வாரம் கிலோ ரூ.38-க்கு விற்பனையானது ரூ.43 ஆகவும், சேலம் வெல்லம் கிலோ ரூ.32-க்கு விற்பனையானது, ரூ.35 ஆகவும் விலை கூடியுள்ளது. மலேசியா, இந்தோனேசியா போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி அதிகரிப்பால்*

*பாமாயில் விலை சரிந்து வருகிறது. ஒரு லிட்டர் பாக்கெட் பாமாயில் கடந்த வாரம் ரூ.50–க்கு விற்பனையானது ரூ.46 ஆகவும், கடலைஎண்ணெய் ஒரு லிட்டர் பாக்கெட் ரூ.85–க்கு விற்பனையாது, ரூ.80 ஆகவும் குறைந்துள்ளது. இதேபோல வத்தல் மிளகாய், பாசிப்பருப்பு விலை குறைந்துள்ளது.*

## குந்தா கூட்டுறவு தொழிற்சாலைக்கு புதிய பச்சை தேயிலை கொள்முதல் மையங்கள் பேரவை கூட்டத்தில் தீர்மானம்

*மஞ்சூர், ஆக.24–*
*குந்தா (எடக்காடு) கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைக்கு புதிய பச்சை தேயிலை கொள்முதல் மையங்கள் அமைக்க பேரவை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*
*பேரவை கூட்டம்*
*மஞ்சூர் அருகில் உள்ள குந்தா (எடக்காடு) கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையின் பேரவை கூட்டம் தொழிற் சாலை அலுவலகத்தில் நடை பெற்றது. இந்த கூட்டத்திற்கு முன்னாள் கூட்டுறவு தணிக் கையாளர் நடுஹட்டி ஆலா கவுடர் தலைமை தாங்கி னார்.*
*முன்னாள் பிக்கட்டி பேரூ ராட்சி தலைவர் பி.என்.ராமன், ஜோகிகவுடர், கே.சகா தேவன், கார்ச்ச வாத்தியார் ஆகியோர் முன்னிலை வகித்த னர். கூட்டத்தில் இன்கோசர்வ் இணை இயக்குனர் ராம மூர்த்தி பேசியதாவது:–*
*லாபம்*
*கடந்த காலங்களில் நஷ்டத் தில் இயங்கி வந்த இந்த தொழிற்சாலை உறுப்பினர் களின் முழு ஒத்துழைப்புடன் தற்போது நஷ்டம் ஈடுகட்டப்பட்டு, ரூ.4 லட்சம் வரை லாபத்தில் இயங்கி வருகிறது. மேலும் நல்ல முறையில் லாபகரமாக இயங்க தொழிற்சாலை உறுப்பினர் கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று கூறினார்.*
*கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. அவை பின்வரு மாறு:–*
*தொழிற்சாலையில் உறுப் பினராக இருந்து இயற்கையாக இறந்தவர்களின் வாரிசு தாரர்களை உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்வது, தொழிற் சாலையில் அங்கீகரிக்கப்பட்ட பங்கு தொகை ரூ.1 கோடியில் இருந்து ரூ.1.50 கோடியாக உயர்த்துவதற்காக துணை விதி எண் 4–ஐ திருத்தம் செய்வது,*
*புதிய கொள்முதல் மையங்கள்*
*தொழிற்சாலையின் பணி யாளர்கள் தொடர்பாக சிறப்பு துணை விதிகளின் படி தொழிற்சாலையில் சீனி யாரிட்டி படி பணியமர்த்துதல் மற்றும் நீண்ட காலமாக பணியாற்றி வரும் தொழி லாளர்கள் நிரந்தர தொழி லாளர் களாக நியமிப்பது, பாதாகண்டிக்கும் ஆடிட் மையத்திற்கும் இடைப்பட்ட பகுதியான கவுண்டம்பாளை யம், அட்டுபாயில் மருந்து குடோன் ஆகிய இடங்களில் தொழிற்சாலைக்காக புதிய பச்சை தேயிலை கொள்முதல் மையங்கள் அமைப்பது, வாடகை அடிப்படையில்*

*செயல்படும் மையங்களுக்கு வாடகை கட்டணம் மாதம் ரூ.250–ல் இருந்து ரூ.500 ஆக உயர்த்துவது.*
*தொழிற்சாலையின் பொது நிதி மூலம் எடக்காடு நூலகத் தில் புத்தகங்கள் அடுக்கி வைக்க ரேக் வாங்க ரூ.5 லட்சமும், எடக்காடு அரசு மேல்நிலைப்பள்ளிக்கு புதிய தளவாட பொருட்கள் வாங்க ரூ.5 லட்சம் வழங்க அனுமதிப்பது. உறுப்பினர்கள் இயற்கை மரணம் அடைந்தால் இறப்பு நிதி ரூ.25 ஆயிரத்தில் இருந்து ரூ.30 ஆயிரமாக உயர்த்துவது*
*எந்திரங்கள்*
*உறுப்பினர்களின் வேண்டு கோளின் படி ஆட்பற்றாக் குறையை சமாளிக்க பச்சை தேயிலை பறிக்கும் நவீன எந்திரங்களை வாங்கி கொடுக்க, குன்னூர் இன்கோசர்வ் நிர்வாகத் தின் மூலம் உடனடியாக நடவ டிக்கை எடுப்பது என்பது உள்பட பல்வேறு தீர்மானங் கள் நிறைவேற்றப்பட்டன.*
*கூட்டத்தில் வக்கீல் அர்ஜுணன், டி.எம்.சந்திரன், டி.எம்.சகாதேவன், எஸ்.கே.பீமன், முன்னாள் இயக்குனர் கள் எல்.விஸ்வம், எல்.பரம சிவம், கிருஷ்ணகுமார், மாதன், ரவி, சுகுமாரன், தொழிற்சாலை தேயிலை தயாரிப்பாளர் நாகேந்திரன், அலுவலக ஊழி யர்கள் லட்சுமி, ராமச் சந்திரன், பெள்ளி, ராமன், போஸ் மற்றும் உறுப்பினர்கள், ஊழியர்கள் கலந்து கொண்ட னர்.*
*முன்னதாக இன்கோசர்வ் இணை இயக்குனர் ராம மூர்த்தி வரவேற்று பேசினார். முடிவில் தொழிற்சாலை கணக்காளர் அபிமன்யு நன்றி கூறினார்.*

## *நீலகிரி மாவட்டத்தில் தரமான தேயிலைக்கு கூடுதல் விலை*

*குன்னூர், ஆக.24–*
*நீலகிரி மாவட்டத்தில் தரமான தேயிலைக்கு கூடுதல் விலை கிடைத் துள்ளது.*
*சிறு விவசாயிகள்*
*நீலகிரி மாவட்டத்தின் பிர தான விவசாய தொழிலாக தேயிலை விவசாயம் உள்ளது. தேயிலை விவசாயத்தை நம்பி நீலகிரி மாவட்டத்தில் சுமார் 60 ஆயிரம் சிறு விவசாயிகள் உள்ளனர்.*
*கடந்த 1997–ம் ஆண்டு 1998–ம் ஆண்டு வரை தேயி லைக்கு நல்ல விலை கிடைத்து வந்தது. அதன் பின்னர் படிப் படியாக தேயிலைக்கு விலை குறைந்தது. கடந்த 2000–ம் ஆண்டு பச்சை தேயிலைக்கு ரூ.4.50 கிடைத்த தால் தேயிலை போராடம் நீலகிரி மாவட்டத்தை ஸ்தம்பிக்க வைத்தது.*
*தரமற்ற தேயிலை*
*தேயிலை விலை வீழ்ச்சிக்கு தரமற்ற தேயிலை தான் காரணம் என்று கண்டுபிடிக்கப் பட்டது. இதனை தொடர்ந்து தேயிலை வாரியமும், உபாசி வேளாண்மை அறிவியல் மையமும் இணைந்து தேயிலை தர மேம்பாட்டு முகாமை நீலகிரி மாவட்டத்தின் கிராமங்கள் தோறும் நடத்தி னர். இதன் விளைவாக சிறு தேயிலை விவசாயிகள் மத்தி*

யில் தரமான தேயிலை குறித்த விழிப்புணர்வு ஏற்பட்டது. கத்தி கொண்டு பச்சை தேயிலை அறுவடை செய் வதை கைவிட வேண்டும் என்று தேயிலை வாரியம் அறிவுறுத்தியது. இதனை தொடர்ந்து சிறு தேயிலை விவசாயிகள் தரமான பச்சை தேயிலையை வழங்க முன் வந்தனர்.

தற்போது கென்யா, இலங்கை போன்ற நாடுகளில் தேயிலை மகசூல் அதிகரித்து இருப்பதால் தரமான தேயி லைக்கு மட்டுமே தேயிலை ஏல மையத்தில் கிராக்கி நிலவி வருவதாக தேயிலை ஏல மைய வட்டாரத்தில் கூறப்படுகிறது. மேலும் தேயிலை வாரியம் அறிவித்துள்ள விலை பகிர்வு திட்டத்தின் கீழ் பச்சை தேயி லைக்கு விலை வழங்க வேண் டும் என்று தேயிலை வாரியம் உத்தரவிட்டு உள்ளது.

நல்ல விலை

இதன்படி பெரும்பாலான தொழிற்சாலைகள் விலை பகிர்மான திட்டத்தின் கீழ் பச்சை தேயிலைக்கு விலை வழங்கி வருகின்றன. கடந்த 21–ந் தேதி 'ஏ' கிரேடு பச்சை தேயிலைக்கு வார விலையாக 14 ரூபாய் முதல் 16 ரூபாய் வரை ஒரு சில தேயிலை தொழிற்சாலைகள் வழங்கி உள்ளன. 'பி' பிளஸ் கிரேடு பச்சை தேயிலைக்கு 13 ரூபாயும், 'பி' கிரேடு பச்சை தேயிலைக்கு ரூ.8.50 முதல் 9 ரூபாய் வரை வழங்கப்பட்டு உள்ளது. 'பி' பிளஸ் பச்சை தேயிலை பதமானதாக இருப்பதால் 13 ரூபாய் விலை கிடைத்து உள்ளது. ஒரு சில பச்சை தேயிலை ஏஜெண்டுகளும் இதனை பின்பற்றி விவசாயி களுக்கு விலை கொடுத்து வருகின்றனர்.

தேயிலை தோட்ட இடு பொருட்கள் செலவு, பரா மரிப்பு செலவு இவைகள் விவசாயிகளுக்கு கூடுதலாகி வருகிறது. இதனை கருத்தில் கொண்டு பார்க்கும் போது பச்சை தேயிலைக்கு 15 ரூபாய் கிடைத்தால் தான் கட்டுப் படியாகும் என்று சிறு தேயிலை விவசாயிகள் கூறு கின்றனர்.

'ஏ' கிரேடு பச்சை தேயிலை எப்போதும் பறிக்க இயலாது என்றும், பச்சை தேயிலைக்கு விலை உயர மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சிறு தேயிலை விவசாயிகள் கூறி வருகின்றனர்.

# தக்காளியை உண்ணும் மாடுகள்



கர்நாடக மாநிலம் சிக்மகளூர் பகுதியில் தக்காளி விலை தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருகிறது. இதனால் விவசாயிகள் தக்காளியை மாடுகளுக்கு உணவாக அளித்து உள்ளனர். தக்காளியை மாடுகள் உண்ணும் காட்சியை படத்தில் காணலாம்.